# அலகு 3 எழுதும் திறன்

1. அலகு 3(i)

- சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் அமைத்தல்
- தொடர் வகைகள் செய்வினை, செயப்பாட்டுவினை, தன்வினை மற்றும் பிறவினை அறிதல்
- ஒருமை பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல்

அலகு 3(ii)

- மரபுத் தமிழ் திணை மரபு உயர்திணை & அஃறிணை
- ஒலி மரபு
- நிறுத்தற்குறியீடுகள்

2. திருக்குறள்

- ஊக்கமுடைமை

3. அறநூல்கள்

- திரிகடுகம்

4. அறிஞர்கள்

- உருத்திரங்கண்ணனார்

## அலகு 3

## 1. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் அமைத்தல்

### 6ம் வகுப்பு பருவம் - 1 : இயல் – 2

**வரிசை மாறியுள்ன சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக.**

1. இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.

2. மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது.

பறவை இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது.

3. மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்

சாண்டியாகோ மிகப்பெரிய மீனைப் பிடித்தார்.

4. மனிதர் இந்தியாவின் டாக்டர் சலீம் அலி பறவை.

இந்தியாவின் பறவை மனிதர் டாக்டர் சலீம் அலி.

### 6ம் வகுப்பு பருவம் - 2 : இயல் – 1

**முறை மாறியுள்ள சொற்களைச் சரியான இடத்தில் பொருத்திச் சொற்றொடரை நிறைவு செய்க.**

1. முளையிலே விளையும் தெரியும் பயிர்

விடை: விளையும் பயிர் முளையிலே தெரியும்

2. ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை

விடை: கல்லாமையை இல்லாமை ஆக்குவோம்.

## 6ம் வகுப்பு பருவம் - 2 : இயல் - 2

**சரியான தொடர் எது? கண்டறிந்து எழுதுக.**

1. கதிரவன் மறையும் காலையில் உதித்து மாலையில்
2. மாலையில் காலையில் உதித்து மறையும் கதிரவன்
3. கதிரவன் காலையில் உதித்து மாலையில் மறையும்
4. மறையும் காலையில் கதிரவன் உதித்து மாலையில்

**இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.**

1) ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் ஊக்கம்
அசைவுஇலா உடையான் உழை.

விடை

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா
ஊக்கம் உடையான் உழை.

2) உள்ளுவது உயர்வுள்ளல் எல்லாம் மற்றது
தள்ளாமை தள்ளினும் நீர்த்துட

விடை

உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

## 8ம் வகுப்பு இயல் 1

**சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.**

1. வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து.
2. உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்.
3. வென்றதைப் பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்.
4. கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.
5. ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.

விடை

ஒழுங்குபடுத்திய தொடர் :

1, வளைந்த கோடுகளால் அமைந்த தமிழ் எழுத்து வட்டெழுத்து எனப்படும்.
2. உலகம் உள்ளவரையிலும் தமிழ்மொழி வாழட்டும்.
3. பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் பரணி ஆகும்.
4. உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்.
5. தமிழ் அம்புவிடும் கலையை ஏகலை என்றது.

## 9ம் வகுப்பு இயல் 7

**பொருத்தமான இடங்களில் அடைமொழியிட்டு, சொற்றொடரை விரிவாக்குக.**

1. புத்தகம் படிக்கலாம் (நல்ல, ஆழ்ந்து, நாளும், தேர்ந்து, மகிழ்ந்து, உணர்ந்து)

விடை:அ) நல்ல புத்தகங்கள் படிக்கலாம்.
ஆ) நல்ல புத்தகத்தில் ஆழ்ந்த கருத்துகளைப் படிக்கலாம்.
இ) நாளும் நல்ல புத்தகம் படிக்கலாம்.
ஈ) நல்ல புத்தகங்களைத் தேர்ந்து எடுத்து படிக்கலாம்.
உ) நல்ல புத்தகங்களை நாளும் மகிழ்ந்து, உணர்ந்து படிக்கலாம்.

2. விளையாடுவது நன்று (ஓடியாடி, மாலையில், சேர்ந்து, திடலில், அனைவருடன்)
விடை:
அ) மாலையில் அனைவருடன் சேர்ந்து விளையாடுவது நன்று.
ஆ) மாலையில் திடலில் ஓடியாடி விளையாடுவது நன்று.

## 9ம் வகுப்பு இயல் 9

**சொற்றொடர் உருவாக்குக.**

1. செந்தமிழும் சுவையும் போல
விடை :தலைவன் தலைவியாக நீவிர் இருவரும் செந்தமிழும் சுவையும் போல இணைந்தே மகிழ்வுடன் இனிதாய் வாழுங்கள்.
2. பசுமரத்தாணிபோல
விடை :குழந்தைப் பருவத்தில் நான் மனனம் செய்த பாரதியார் பாடல்கள் அனைத்தும் பசுமரத்தாணி போல பதிந்து விட்டது.
3. உள்ளங்கை நெல்லிக்கனி போல
விடை :என் தமிழாசிரியர் நடத்திய அணியிலக்கணம் உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாகப் புரிந்தது.
4. அத்தி பூத்தாற்போல
விடை :என் மாமாவின் வருகை அத்தி பூத்தாற்போல் என்றாவது நிகழ்வதால் மனம் மகிழ்ச்சியில் துள்ளும்.
5. மழைமுகம் காணாப் பயிர் போல
விடை :தன் குடும்பத்தை விட்டு விடுதிக்குச் சென்ற கமலா, மழைமுகம் காணாப் பயிர் போல சோர்வுற்று வாடிக் காணப்பட்டாள்.

## அலகு 3
## தொடர்வகைகள் – செய்வினை, செயப்பாட்டுவினை, தன்வினை மற்றும் பிறவினை அறிதல்
### 7ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம்- 3 இயல் 2

**அ) சொற்றொடர் வகைகள்**

சொற்றொடர் உணர்த்தும் பொருளைக்கொண்டு செய்தித்தொடர், வினாத்தொடர், கட்டளைத்தொடர், உணர்ச்சித்தொடர் என வகைப்படுத்தலாம்.

- நேற்று, எங்கள் பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது. -செய்தித்தொடர்.

- உன் இருப்பிடம் எங்குள்ளது?-வினாத்தொடர்
- இளமையில் கல்.-கட்டளைத்தொடர்
- என்னே, இந்த ஓவியத்தின் அழகு!-உணர்ச்சித்தொடர்

**கீழுள்ள சொற்றொடரை வகைப்படுத்துக.**

1. காந்தியடிகள் தீண்டாமையை எதிர்த்துப் போராடினார்.- செய்தித்தொடர்
2. உன்னிடம் திருக்குறள் புத்தகம் இருக்கிறதா? - வினாத்தொடர்
3. தொல்காப்பியன் வீட்டுக்கு வந்திலன். – எதிர்மறைத்தொடர்(செய்தி)
4. என்னே, தாஜ்மகாலின் அழகு! - உணர்ச்சித்தொடர்
5. வீட்டைத் தூய்மையாக வைத்திரு. கட்டளைத்தொடர்

**சொற்றொடர் மாற்றங்கள்**

- ஒரு தொடரை மற்றொரு தொடராக மாற்றுதல்.
- (எ.கா.) முயன்றால் முடியாதது உண்டோ? இவ்வினாத்தொடரை
- முயன்றால் அனைத்தும் முடியும், எனச் செய்தித்தொடராக்கலாம்.
- நாள்தோறும் உடற்பயிற்சி செய். -கட்டளைத்தொடர்
- நாள்தோறும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.-செய்தித்தொடர்.

**பயிற்சி : கீழுள்ள சொற்றொடரை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**

1. மாற்றுத்திறனாளியரை மதித்தல் வேண்டும். (கட்டளைத் தொடராக்குக.)
   மாற்றுத்திறனாளியரை மதிக்க வேண்டும்.
2. உழைப்பின்றி ஊதியம் இல்லை. (உடன்பாட்டுத் தொடராக்குக.)
   உழைத்தால் தான் ஊதியம் கிடைக்கும்
3. நான் திருக்குறள் படித்தேன். (வினாத்தொடராக்குக.)
   நான் திருக்குறள் படித்தேனா?
4. அந்தோ, குழந்தை கீழே விழுந்துவிட்டதே! (செய்தித் தொடராக்குக.)
   குழந்தை கீழே விழுந்து விட்டது
5. உன் கையெழுத்து மிகவும் அழகாக உள்ளது. (உணர்ச்சித் தொடராக்குக.)
   ஆகா! உன் கையெழுத்து என்னே! அழகு

**ஆ) தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுதல்**

- மரபுத்தொடர், பழமொழித்தொடர், உவமைத்தொடர் முதலிய தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுவதன்மூலம் கருத்தை எளிதில் விளங்கச் செய்யலாம்.

  (எ.கா.) தாய், தன் குழந்தையைக் கண்ணுங்கருத்துமாக வளர்த்தாள்.
- அண்ணா, தங்குதடையின்றிப் பேசும் ஆற்றல் உடையவர்.

**பயிற்சி : கீழுள்ள தொடர்களைச் சொற்றொடரில் அமைத்தெழுதுக.**

1. பழக்கவழக்கம் – என்னுடைய நண்பர்களின் பழக்கவழக்கம் சரியாக உள்ளது.
2. ஊணுறக்கமின்றி – நேற்று, என் தந்தை ஊணுறக்கமின்றி வேலை செய்தார்.
3. பேரும்புகழும் – என் பெற்றோர்க்கு நான் பேரும் புகழும் பெற்று தருவேன்.
4. தொன்றுதொட்டு – தொன்றுதொட்டு வரும் பழக்க வழக்கத்தை நாம் பாதுகாக்க வேண்டும்
5. அல்லும்பகலும் – நான் அல்லும்பகலும் வேலை பார்த்தேன்.
6. மேடும்பள்ளமும் – நான் மேடும்பள்ளமும் பார்த்து நடப்பேன்.

## 8ம் வகுப்பு பழைய புத்தகம் இயல் 1

### சொற்றொடர் வகைகள்

**செய்வினை – செயப்பாட்டு வினை**

- (எ.கா.) செய்வினைத்தொடர்: கயல்விழி திருக்குறளைப் படித்தாள். – (எழுவாய்) (செயப்படுபொருள்) (பயனிலை)
- இத்தொடரைச் செயப்பாட்டுவினையாக்க,
- அ. எழுவாயைச் செயப்படுபொருளாக்குதல் வேண்டும்.
- ஆ. அதனுடன் மூன்றாம் வேற்றுமை உருபு சேர்த்தல் வேண்டும். (கயல்விழி + ஆல் = கயல்விழியால்)
- இ. செயப்படுபொருளில் உள்ள 'ஐ' என்ற வேற்றுமை உருபை நீக்கி, எழுவாயாக மாற்றுதல் வேண்டும். (திருக்குறளை = திருக்குறள் + ஐ = ஐ நீக்கினால், திருக்குறள்)
- ஈ. பயனிலையுடன் படு, பட்டது என்னும் துணைவினை சேர்த்தல் வேண்டும். (படித்தாள் = படிக்கப்பட்டது)
- திருக்குறள் கயல்விழியால் படிக்கப்பட்டது – செயப்பாட்டு வினைத்தொடர்.

**செயப்பாட்டு வினை – செய்வினை**

- (எ.கா.) குறிஞ்சிக்கலி கபிலரால் இயற்றப்பட்டது – செயப்பாட்டுவினை
- கபிலர் குறிஞ்சிக்கலியை இயற்றினார் – செய்வினை
- இவ்வாறு செயப்பாட்டுவினைத் தொடரையும் செய்வினைத் தொடராக மாற்றலாம்.

**கீழ்க்காணும் தொடர்களைச் செயப்பாட்டு வினையாக்குக.**

அ) கலையரசி துணியைத் தைத்தாள். – துணி கலையரசியால் தைக்கப்பட்டது
ஆ) ஆசிரியர் பாடத்தை நடத்தினார். – பாடம் ஆசிரியரால் நடத்தப்பட்டது
இ) பூங்குழலி உணவைச் சமைத்தாள்.– உணவு பூங்குழலியால் சமைக்கப்பட்டது

**1. கீழ்க்காணும் தொடர்களைச் செய்வினையாக்குக.**

அ) ஓவியம் மாறனால் வரையப்பட்டது. – மாறன் ஓவியம் வரைந்தான்
ஆ) மாலை மல்லிகாவினால் தொடுக்கப்பட்டது. – மல்லிகா மாலையைத் தொடுத்தாள்

இ) பாரி கபிலரால் போற்றப்பட்டார். – கபிலர் பாரியை போற்றினார்

1. செய்தி வெளிப்படும் திறன்

- தொடர்களில் செய்தி வெளிப்படும் தன்மையினைப் பொருத்துச் செய்தித்தொடர், வினாத்தொடர், விழைவுத்தொடர், உணர்ச்சித்தொடர் எனப் பலவகைப்படுத்தலாம். விழைவுத்தொடர் வாழ்த்துதல், வேண்டுதல், கட்டளையிடுதல், வைதல் ஆகிய பொருள்களில் வரும்.
- (எ.கா) 'முயற்சி திருவினையாக்கும்' என்பது ஆன்றோர் மொழி – செய்தித்தொடர்
- பாடம் படித்தாயா? – வினாத்தொடர்
- நீடூழி வாழ்க! – விழைவுத்தொடர்
- என்னே, அருவியின் அழகு! – உணர்ச்சித்தொடர்
- கண்ணன் பாடம் படித்தான். – உடன்பாட்டுத்தொடர் (செய்தி)
- கண்ணன் பாடம் படித்திலன். – எதிர்மறைத்தொடர் (செய்தி)

## 8ம் வகுப்பு பழைய புத்தகம் இயல் 2

நேர்கூற்று அயற்கூற்றுத் தொடர்கள்

நேர்கூற்று :

- "வேல்விழி, நன்றாகப் படித்துத்தேர்வில் முதன்மை பெறு" என்று ஆசிரியர் அறிவுரை கூறினார். இது நேர்கூற்றுத்தொடர். ஒருவர் நேரே கூறுவதுபோல் அமைவது நேர்கூற்று எனப்படும். நேர்கூற்று, தன்மை, முன்னிலை ஆகிய இரு இடங்களிலும் வரும்.

அயற்கூற்று:நன்றாகப் படித்துத் தேர்வில் முதன்மை பெறுமாறு ஆசிரியர் வேல்விழிக்குக் கூறினார்.

நேர்கூற்றை அயற்கூற்றாக மாற்ற நினைவில் கொள்ள வேண்டியவை:

- நேர்கூற்றில் உள்ள மேற்கோள், காற்புள்ளி இவற்றை எடுத்துவிட வேண்டும்.
- 'என்று', 'என' என்ற செய்தியை முடிக்கும் சொல்லை நீக்கவேண்டும்.
- முன்னிலையிடத்தைத் தன்மையாகவோ படர்க்கையாகவோ மாற்றவேண்டும்.
- தன்மையிடத்தைப் படர்க்கையாக மாற்றவேண்டும்.
- கட்டளைச் சொல்லோடு ஆறு, ஆக எனும் சொல்லைச் சேர்க்கவேண்டும்.
- நேர்கூற்றை அயற்கூற்றாக மாற்றும்போது மாறும் சொற்கள்

| நேர்கூற்று | அயற்கூற்று |
|---|---|
| இன்று | அன்று |
| நாளை | மறுநாள் |
| நேற்று | முன்னாள் |
| இப்பொழுது | அப்பொழுது |
| இது | அது |

| | |
|---|---|
| இவை | அவை |
| இதனால் | அதனால் |
| நான் | தான் |
| நாம், நாங்கள் | தாம், தாங்கள் |
| நீ | அவன், அவள் |
| நீங்கள் | அவர்கள் |

**அயற்கூற்றுத் தொடரையும் நேர்கூற்றாக மாற்றலாம்**

- (எ.கா.) கவிஞர் சங்கத்தமிழ் நூலைப் படிக்குமாறு தம்பிக்குக் கூறினார். (அயற்கூற்று)
- இச்சொற்றொடரில் செய்தி அடுத்தவர் கூறுவதுபோல அமைந்துள்ளது.
- "தம்பி, சங்கத்தமிழ் நூலைப்படி" என்று கவிஞர் கூறினார். (நேர்கூற்று)

**கீழ்க்காணும் சொற்றொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**

1. பாரதிதாசன், "தமிழ் என் உயிர் என்பேன்" என்றார். (அயற்கூற்றாக்குக)
2. தான் நாளை வருவதாகப் பூவிழி கூறினாள். (நேர்கூற்றாக்குக)
3. "நீ வைகறையில் துயிலெழ வேண்டும்" என்று ஆசிரியர் சிந்தனைச்செல்வனிடம் கூறினார். (அயற்கூற்றாக்குக)
4. தந்தை தம்மகனை நோக்கி, "நீ நாள்தோறும், ஒழுங்காகப் பாடத்தைப் படித்துக்கொண்டு வா" என்று கூறினார். (அயற்கூற்றாக்குக)
5. பழத்தைத் தனக்குக் கொடுக்குமாறு கபிலனை வேலன் கேட்டான். (நேர்கூற்றாக்குக)

tnpscbooks

**விடைகள் :**

1. பாரதிதாசன் தமிழ் அவர் உயிர் என்றார்
2. நான் நாளை வருவேன் என்று பூவிழி கூறினாள்.
3. ஆசிரியர் வைகறையில் துயிலெழ வேண்டுமாறு சிந்தனைச்செல்வனிடம் கூறினார்
4. தினந்தோறும் ஒழுங்காகப் பாடத்தை படித்துக்கொண்டு வரவேண்டுமென அவன் தந்தை அவனிடம் கூறினார்
5. கபிலன், "பழத்தை எனகுத் தா" என்று வேலனைக் கேட்டான்.

## 9ம் வகுப்பு இயல் 1 தொடர் இலக்கணம்

**எட்வர்டு வந்தான்.**

- இந்தச் சொற்றொடரில் பெயர்ச்சொல், எட்வர்டு என்பதாகும். இந்தச் சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்லையே எழுவாய் என்கிறோம்.

கனகாம்பரம் பூத்தது.

- இந்தச் சொற்றொடரில் வினைச்சொல், பூத்தது. இந்த வினைச்சொல்லே பயனிலை ஆகும். ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தைப் பயனிலை என்கிறோம்.

மீனா கனகாம்பரத்தைச் சூடினாள்.

- இத்தொடரில், சொற்றொடர் எழுவதற்குக் காரணமாக அமைந்த மீனா என்னும் பெயர்ச்சொல்லே எழுவாய் ஆகும். அவ்வெழுவாயின் பயனிலை சூடினாள் என்பதாகும். எனில், மற்றொரு பெயர்ச்சொல்லான கனகாம்பரம் என்பது யாது? அது செயப்படுபொருள் என்று அழைக்கப்படுகிறது. எழுவாய் ஒரு வினையைச் செய்ய அதற்கு அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே, செயப்படுபொருள் ஆகும்.
- ஒரு தொடரில் எழுவாயும், செயப்படு பொருளும் பெயர்ச்சொல்லாகவும் பயனிலை வினை முற்றாகவும் இருக்கும். பயனிலை, அந்தத் தொடரின் பயன் நிலைத்து இருக்கும் இடமாகும். ஒரு தொடரில் செயப்படுபொருள் இருக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. செயப்படுபொருள் தோன்றும் தொடர், விளக்கமாக இருக்கும்.

படித்தாய்.

- இத்தொடரில் படித்தாய் என்பது பயனிலை. நீ என்னும் எழுவாய் வெளிப்படையாகத் தெரியவில்லை. இதைத் தோன்றா எழுவாய் என்று கூறுகிறோம்.

நான் வந்தேன்.

- இத்தொடரில் வினைமுற்று பயனிலையாக வந்தது. இது வினைப் பயனிலை எனப்படும்.

சொன்னவள் கலா.

- இங்கு கலா என்னும் பெயர்ச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது பெயர்ப் பயனிலை எனப்படும்.

விளையாடுபவன் யார்?

- இங்கு யார் என்னும் வினாச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது வினாப் பயனிலை எனப்படும்.
- சில இடங்கள் தவிர, ஒரு சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இந்த வரிசையில்தான் வரவேண்டும் என்று எந்தக் கட்டுப்பாடும் இல்லை. தமிழின் தொடர் அமைப்பின் சிறப்புகளுள் இதுவும் ஒன்று .
- எடுத்துக்காட்டு: நான் பாடத்தைப் படித்தேன் (எழுவாய், செயப்படுபொருள், பயனிலை)
- பாடத்தை நான் படித்தேன் (செயப்படுபொருள், எழுவாய், பயனிலை)
- படித்தேன் நான் பாடத்தை (பயனிலை, எழுவாய், செயப்படுபொருள்)
- நான் படித்தேன் பாடத்தை (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்)
- பாடத்தைப் படித்தேன் நான் (செயப்படுபொருள், பயனிலை, எழுவாய் )

நல்ல நூல் ஒன்று படித்தேன்.

- இத்தொடரில் நல்ல என்னும் சொல், எழுவாயாக வரும் பெயர்ச்சொல்லுக்கு அடையாக வருகிறது. இவ்வாறு அமைவதனைப் பெயரடை என்கிறோம்.

மகிழ்நன் மெல்ல வந்தான்.

- இத்தொடரில் மெல்ல என்னும் சொல், வந்தான் என்னும் வினைப் பயனிலைக்கு அடையாக வருகிறது. இதை வினையடை என்கிறோம்.

**வினை வகைகள் – தன்வினை, பிறவினை**

- மாணவர்கள் கால்பந்து விளையாடிக்கொண்டிருக்கின்றார்கள். எங்கும் விளையாட்டு, மகிழ்ச்சியின் ஆரவாரம். கண்ணன் முகமதுவை நோக்கி, "பந்தை என்னிடம்

உருட்டு" என்று கத்தினான். முகமது பந்தைக் கண்ணனிடம் உருட்டினான். பந்து உருண்டது. கண்ணன் முகமது மூலம் பந்தை உருட்டவைத்தான்.

- மேற்கண்ட சூழலில்,
- பந்து உருண்டது என்பது தன்வினை
- உருட்டவைத்தான் என்பது பிறவினை
- எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அது பிறவினை எனப்படும்.
- பிறவினைகள், வி, பி போன்ற விகுதிகளைக் கொண்டும் செய், வை, பண்ணு போன்ற துணை வினைகளை இணைத்தும். உருவாக்கப்படுகின்றன.
- தன்வினை : அவன் திருந்தினான்
- அவர்கள் நன்றாக படித்தனர்
- பிறவினை : அவனைத் திருந்த செய்தான்
- தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார்
- பள்ளிக்குப் புத்தகங்கள் வருவித்தார்.

**செய்வினை, செயப்பாட்டுவினை**

- அப்பா சொன்னார், "குமுதா, இலையில் உள்ள இட்டிலியை விரைந்து சாப்பிடு. அடுத்துத் தோசை வரப்போகிறது." அவள் சாப்பிட்டு முடிப்பதற்குள், தோசை வைக்கப்பட்டது.)
- அப்பா சொன்னார் – செய்வினைத் தொடர்
- தோசை வைக்கப்பட்டது – செயப்பாட்டுவினைத் தொடர்
- இது போலவே, பாட்டுப் பாடுகிறாள் – செய்வினைத் தொடர்
- பாட்டுப் (அவளால்) பாடப்பட்டது – செயப்பாட்டுவினைத் தொடர்
- செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை செய்வினை; செயப்படு பொருளை முதன்மைப்படுத்தும் வினை செயப்பாட்டு வினை என்பதை நினைவில் கொள்க.
- 'படு' என்னும் துணை வினைச்சொல் செயப்பாட்டு வினைத் தொடரில் சேர்ந்துவிடுகிறது.
- 'படு' என்பதைப் போல, 'உண், பெறு' முதலான துணைவினைகள் செயப்பாட்டு வினைகளாக அமைகின்றன. அவற்றைப் போலவே, எச்சங்களுடன் சேர்ந்து ஆயிற்று, போயிற்று, போனது' முதலான துணை வினைகள் செயப்பாட்டுவினைகளை உருவாக்குகின்றன.
- கோவலன் கொலையுண்டான்.
- ஓவியம் குமரனால் வரையப்பட்டது.
- வீடு கட்டியாயிற்று.
- சட்டி உடைந்து போயிற்று.
- பணம் காணாமல் போனது.

**பயன்பாட்டுத் தொடர்கள்**

- அப்துல் நேற்று வந்தான் – தன்வினைத் தொடர்
- அப்துல் நேற்று வருவித்தான் – பிறவினைத் தொடர்
- கவிதா உரை படித்தாள் – செய்வினைத் தொடர்
- உரை கவிதாவால் படிக்கப்பட்டது – செயப்பாட்டுவினைத் தொடர்

- குமரன் மழையில் நனைந்தான் – உடன்பாட்டுவினைத் தொடர்
- குமரன் மழையில் நனையவில்லை – எதிர்மறைவினைத் தொடர்
- என் அண்ணன் நாளை வருவான் – செய்தித் தொடர்
- எவ்வளவு உயரமான மரம்! – உணர்ச்சித் தொடர்
- உள்ளே பேசிக்கொண்டிருப்பவர் யார்? – வினாத் தொடர்
- பூக்களைப் பறிக்காதீர் – கட்டளைத் தொடர்
- இது நாற்காலி – பெயர்ப் பயனிலைத் தொடர்
- அவன் மாணவன் – பெயர்ப் பயனிலைத் தொடர்

## பகுபத உறுப்பிலக்கணம்

- பதம்(சொல்) இருவகைப் படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும். பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும். இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.
- பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

**பகுதி**(முதனிலை)

- சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும்.

**விகுதி**

- (இறுதிநிலை) – சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும்.

**இடைநிலை**

- பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும்.

**சந்தி**

- பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்.

**சாரியை**

- பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.

**விகாரம்**

- தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம்.

**பகுதி:**

- ஊரன் – ஊர்,
- நடிகன் – நடி,
- பார்த்தான் – பார்,
- வரைந்தான் – வரை
- மடித்தார் – மடி
- மகிழ்ந்தாள் – மகிழ்

**விகுதி:**

| | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் – ஆண்பால் வினைமுற்று | அன், ஆன் |

| | | |
|---|---|---|
| | விகுதி | |
| பாடுகிறாள் | ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி | அள்,ஆள் |
| பெற்றார் | ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து,று |
| ஓடின | அ – பலவின்பால் வினைமுற்று விகுதி | அ,ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| உண்டோம் | ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம்,ஓம் |
| செய்தாய் | ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ |
| பாரீர் | ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர் |
| அழகிய, பேசும் | அ, உம் – பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| வந்து, தேடி | உ, இ – வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு... |

tnpscbooks

**இடைநிலைகள்**

| | | |
|---|---|---|
| வென்றார் | ற்–இறந்தகால இடைநிலை | த், ட், ற், இன் |
| உயர்கிறான் | கிறு – நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று |
| புகுவான், செய்கேன் | வ், க் – எதிர்கால இடைநிலைகள் | ப்,வ், க் |
| பறிக்காதீர் | ஆ – எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| மகிழ்ச்சி, அறிஞன் | ச், ஞ் – பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

**சந்தி**

- உறுத்தும் – த் – சந்தி – த், ப், க
- பொருந்திய – ய் – உடம்படுமெய் சந்தி – ய்,வ்

**சாரியை**

- நடந்தனன் – அன் – சாரியை – அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, குன்

## எழுத்துப்பேறு

- பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு.

எடுத்துக்காட்டுகள்

- வந்தனன்: வா(வ) + த்(ந்) + த் + அன் + அன்
- வா – பகுதி ('வ' ஆனது விகாரம்)
- த்(ந்) – சந்தி ('ந்' ஆனது விகாரம்)
- த் – இறந்தகால இடைநிலை
- அன் – சாரியை
- அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி
- செய்யாதே: செய் + ய் + ஆ + த் + ஏ
- செய் – பகுதி
- ய் – சந்தி
- ஆ – எதிர்மறை இடைநிலை
- த் – எழுத்துப்பேறு
- ஏ – முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி

# துணைவினைகள்

## வினைவகைகள்

- வினைச்சொற்களை அவற்றின் அமைப்பு, பொருள், சொற்தொடரில் அவை தொழிற்படும் விதம் முதலான அடிப்படை பலவகையாகப் பாகுபடுத்தலாம்.

tnpscbooks

## தனிவினையும் கூட்டுவினையும்

- வினைச்சொற்களை அமைப்பின் அடிப்படையில் தனிவினை, கூட்டுவினை என இருவகைப்படுத்தலாம்.

## தனிவினை

- படி படியுங்கள் படிக்கிறார்கள்.
- மேற்காணும் சொற்களைக் கவனியுங்கள். இவற்றில் படி என்னும் வினையடியும் சில ஒட்டுகளும் உள்ளன. படி என்னும் வினையடி , பகாப்பதம் ஆகும். அதை மேலும் பொருள் தரக்கூடிய கூறுகளாகப் பிரிக்க முடியாது. இவ்வாறு, தனிவினையடிகளை அல்லது தனிவினையடிகளை கொண்ட வினைச்சொற்களைத் தனிவினை என்பர்.

## கூட்டுவினை

- ஆசைப்பட்டேன், கண்டுபிடித்தார்கள், தந்தியடித்தேன், முன்னேறினோம்.
- மேற்காணும் சொற்களைக் கவனியுங்கள். ஆசைப்படு, கண்டுபிடி, தந்தியடி, முன்னேறு என்பன அவற்றின் வினையடிகள். அவை பகுபதங்கள் ஆகும். இவ்வாறு

பகுபதமாக உள்ள வினையடிகளைக் கூட்டுவினையடிகள் என்பர். அவ்வகையில் கூட்டுவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைக் கூட்டுவினை என்பர்.

- கூட்டுவினைகள் பொதுவாக மூன்று வகையாக ஆக்கப்படுகின்றன.

1) பெயர் + வினை = வினை

தந்தி + அடி = தந்தியடி

ஆணை + இடு = ஆணையிடு

கேள்வி + படு = கேள்விப்படு

2) வினை + வினை = வினை

கண்டு + பிடி = கண்டுபிடி

சுட்டி + காட்டு = சுட்டிக்காட்டு

சொல்லி + கொடு = சொல்லிக்கொடு

3) இடை + வினை = வினை

முன் + ஏறு = முன்னேறு

பின் + பற்று = பின்பற்று

கீழ் + இறங்கு = கீழிறங்கு

**முதல்வினையும் துணைவினையும்**

- நான் படம் பார்த்தேன்.
- கண்ணன் போவதைப் பார்த்தேன்.
- இந்தச் சொற்றொடர்களில், பார் என்னும் வினை, கண்களால் பார்த்தல் என்னும் பொருளைத் தருகிறது. இது பார் என்னும் வினையின் அடிப்படைப் பொருள் அல்லது சொற்பொருள்(LEXICAL MEANING) எனலாம்.
- ஓடப் பார்த்தேன்.
- எழுதிப் பார்த்தாள்.
- இந்தச் சொற்றொடர்களில் ஓடப்பார், எழுதிப்பார் என்பன கூட்டுவினைகள் ஆகும். இவற்றில் இரண்டு உறுப்புகள் உள்ளன. ஓட, எழுதி என்பன முதல் உறுப்புகள். இவை அந்தந்த வினைகளின் அடிப்படைப் பொருளைத் தருகின்றன. பார் என்பது இரண்டாவது உறுப்பு. இது இவ்வினையின் அடிப்படைப் பொருளான பார்த்தல் என்னும் பொருளைத் தராமல் தனது முதல் உறுப்போடு சேர்ந்து வேறு பொருள் தருகிறது.
- ஓடப் பார்த்தேன் – இதில் பார் என்பது முயன்றேன் என்னும் முயற்சிப் பொருளைத் தருகிறது.
- எழுதிப் பார்த்தாள் – இதில் பார் என்பது சோதித்து அறிதல் என்னும் பொருளைத் தருகிறது.
- ஒரு கூட்டுவினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை, முதல் வினை (MAIN VERB) எனப்படும். ஒரு கூட்டு வினையின் இரண்டாவது உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளை விட்டுவிட்டு முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை, துணைவினை எனப்படும்.

- கூட்டுவினையின் முதல் வினை செய அல்லது செய்து என்னும் வினையெச்ச வடிவில் இருக்கும். துணைவினை, வினையடி வடிவில் இருக்கும். துணைவினையே திணை, பால், இடம், காலம் காட்டும் விகுதிகளைப் பெறும். தமிழில் ஏறத்தாழ 40 துணைவினைகள் உள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை முதல்வினையாகவும் செயல்படுகின்றன.
- பார், இரு, வை, கொள், போ, வா, முடி, விடு, தள்ளு, போடு, கொடு, காட்டு முதலானவை இருவகை வினைகளாகவும் செயல்படுகின்றன.

**துணைவினைகளின் பண்புகள்**

- துணைவினைகள் பேசுவோரின் மனநிலை, செயலின் தன்மை போன்றவற்றைப் புலப்படுத்துகின்றன.
- இவை முதல் வினையைச் சார்ந்து அதன் வினைப்பொருண்மைக்கு மெருகூட்டுகின்றன.
- பேச்சு மொழியிலேயே துணைவினைகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.
- தற்காலத் தமிழில் ஆம், ஆயிற்று, இடு, ஒழி, காட்டு, கூடும், கூடாது, கொடு, கொண்டிரு, கொள், செய், தள்ளு, தா, தொலை, படு, பார், பொறு, போ, வை, வந்து, விடு, வேண்டாம், முடியும், முடியாது, இயலும், இயலாது, வேண்டும், உள் போன்ற பல சொற்கள் துணைவினைகளாக வழங்குகின்றன.
- தமிழ் மற்றும் ஜப்பானிய மொழிகளில் துணைவினைகள் முதல் வினைகளுக்குப் பின்பே இடம்பெறும். (எ.கா.) கீழே விழப் பார்த்தான். இத்தொடரில் விழு (விழ) என்பது முதல்வினை; பார்த்தான் என்பது துணைவினை.
- தமிழின் துணைவினைக் கொள்கை ஆங்கிலத்தின் துணைவினைக் கொள்கையிலிருந்து வேறுபட்டது. அதாவது, தமிழில் துணைவினையாக வரும் வேர்ச்சொல் சில தொடர்களில் முதல்வினையாகவும் வரும்.

| வினையடி | முதல்வினை | துணைவினை |
|---|---|---|
| இரு | புத்தகம் மேசையில் இருக்கிறது | நான் மதுரைக்குப் போயிருக்கிறேன். |
| | என்னிடம் பணம் இருக்கிறது. | அப்பா வந்திருக்கிறார். |
| வை | அவள் நெற்றியில் பொட்டு வைத்தாள். | நீ என்னை அழ வைக்காதே. |
| | அவன் வானொலியில் பாட்டு வைத்தான். | அவர் ஒருவரைப் பாட வைத்தார். |
| கொள் | பானை நான்கு படி அரிசி கொள்ளும். | நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான். |
| | நான் சொன்னதை நீ கருத்தில் கொள்ளவில்லை. | நோயாளியைப் பார்த்துக் கொள்கிறேன். |
| போ | அவன் எங்கே போகிறான்? | மழை பெய்யப் போகிறது. |
| | நான் கடைக்குப் போனேன். | நான் பயந்துபோனேன். |
| வா | நீ நாளைக்கு வீட்டுக்கு வா. | அந்நியர் நம்மை ஆண்டு |

| | | |
|---|---|---|
| | | வந்தனர். |
| | எனக்கு இப்போதுதான் புத்தி வந்தது. | வானம் இருண்டு வருகிறது. |
| விடு | யாரையும் உள்ளே விடாதே. | அடுத்த மாதம் நான் போய்விடுவேன். |
| | மழைவிட்டதும் போகலாம். | அப்பா இனி வந்துவிடுவார். |
| தள்ளு | அவன் என்னைக் கீழே தள்ளினான். | அவர் கதைகதையாக எழுதித்தள்ளுகிறார். |
| | காய்கறிவண்டியைத் தள்ளிச் சென்றார். | அவன் அனைத்தையும் வாசித்துத் தள்ளுகிறான். |
| போடு | புத்தகத்தைக் கீழே போடாதே. | மலிவான விலையில் வாங்கிப் போட்டேன். |
| | தலையில் தொப்பியைப் போடு. | விழித்தவுடன் பாயைச் சுருட்டிப் போடவேண்டும். |
| கொடு | நான் அவருக்குப் பணம் கொடுத்தேன். | பசித்தவனுக்குச் சோறு வாங்கிக் கொடுத்தான். |
| | அவன் உயிரைக் கொடுத்து வேலை செய்கிறான். | பாடம் சொல்லிக் கொடுப்பேன். |
| காட்டு | தாய் குழந்தைக்கு நிலவைக் காட்டினாள். | ஆசிரியர் செய்யுளைப் பாடிக் காட்டினார். |
| | சான்றோர் காட்டிய பாதையில் செல். | படித்தபடி நடந்துகாட்ட வேண்டும். |

tnpscbooks

1. தொடர்களை மாற்றி உருவாக்குக.

அ) பதவியை விட்டு நீக்கினான். (இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)

விடை :பதவியை விட்டு நீக்குவித்தான்.

ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர். (இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)

விடை :மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர்.

இ) உண்ணப்படும் தமிழ்த்தேனே. (இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக)

விடை :உண்ணும் தமிழ்த்தேனே.

ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாக பகுத்துள்ளனர். (இத்தொடரை செயப்பாட்டு வினைத் தொடராக மாற்றுக)

விடை :திராவிட மொழிகள் மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார். (இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)

விடை : நிலவன் சிறந்த பள்ளியில் படிப்பித்தான்.

2. சொற்களைத் தொடர்களாக மாற்றுக :

அ) மொழிபெயர் (தன்வினை, பிறவினை தொடர்களாக மாற்றுக)

விடை :

மொழி பெயர்த்தாள் - தன்வினை

மொழி பெயர்ப்பித்தாள் - பிறவினை

ஆ) பதிவுசெய் (செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக மாற்றுக)

விடை :

பதிவு செய்தான் - செய்வினை

பதிவு செய்யப்பட்டது - செயப்பாட்டுவினை

இ) பயன்படுத்து (தன்வினை, பிறவினைத் தொடர்களாக மாற்றுக)

விடை :

பயன்படுத்துவித்தான் - பிறவினை

பயன்படுத்தினான் - தன்வினை

ஈ) இயங்கு (செய்வினை, செயப்பாட்டு வினை தொடர்களாக மாற்றுக)

விடை :

இயங்கினாள் - செய்வினை

இயக்கப்பட்டாள் - செயப்பாட்டுவினை

3. பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.

(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களைக், நம்மை, வாழ்வியல் அறிவை)

அ) தமிழ் செவ்விலக்கியங்களைக் கொண்டுள்ளது.

ஆ) நாம் தமிழிலக்கிய நூல்களை வாங்க வேண்டும்

இ) புத்தகங்கள் வாழ்வியல் அறிவைக் கொடுக்கின்றன.

ஈ) நல்ல நூல்கள் நம்மை நல்வழிப்படுத்துகின்றன.

4. பொருத்தமான பெயரடைகளை எழுதுக.

( நல்ல, பெரிய, இனிய, கொடிய)

அ) எல்லோருக்கும் இனிய வணக்கம்.

ஆ) அவன் நல்ல நண்பனாக இருக்கிறான்.

இ) பெரிய ஓவியமாக வரைந்து வா.

ஈ) கொடிய விலங்கிடம் பழகாதே.

5. பொருத்தமான வினையடைகளைத் தேர்வுசெய்க.

(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)

அ) ஊர்தி மெதுவாகச் சென்றது.

ஆ) காலம் வேகமாக ஓடுகிறது.

இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை அழகாகக் காட்டுகிறது.

ஈ) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் பொதுவாகக் காட்டு.

6. அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.

அ) நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். (வினாத்தொடராக எழுதுக)

விடை :
நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினரா? (அல்லது) இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தியவர் யார்?
ஆ) இசையின்றி அமையாது பாடல். (உடன்பாட்டுத் தொடராக அமைக்க)
விடை :
இசையோடு அமையும் பாடல்
இ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? (கட்டளைத் தொடராக மாற்றுக)
விடை :
நீ இதைச் செய்.

**7. வேர்ச்சொல்லை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக.**

அ) தா (உடன்பாட்டு வினைத்தொடர், பிறவினைத் தொடர் ஆக்குக)
விடை :
தந்தேன் - உடன்பாட்டு வினைத்தொடர்
தருவித்தேன் - பிறவினைத் தொடர்
ஆ) கேள் (வினாத்தொடர் ஆக்குக)
விடை :
கேட்டாயா? - வினாத் தொடர்
இ) கொடு (செய்தித் தொடர், கட்டளைத் தொடர் ஆக்குக)
விடை :
நீ அதைக் கொடு - செய்தித் தொடர்
நீ கொடு - கட்டளைத் தொடர்
ஈ) பார் (செய்வினைத் தொடர், செயப்பாட்டு வினைத் தொடர், பிறவினைத் தொடர் ஆக்குக)
விடை :
பார்த்தான் - செய்வினைத் தொடர் பார்க்கப்பட்டான் - செயப்பாட்டு வினைத் தொடர்
பார்க்கச் செய்தான் - பிறவினைத் தொடர்

**8. சிந்தனை வினா**

**கீழ்க்காணும் சொற்றொடர்கள் சரியானவையா? விளக்கம் தருக.**

**விடை :**

அ) அவை யாவும் இருக்கின்றன –
தவறு (அவை - பன்மை ; யாவும் - ஒருமை)
அவை யாவையும் இருக்கின்றன. –
சரி (அவை - பன்மை ; யாவையும் - பன்மை )
அவை யாவும் எடுங்கள் -
தவறு (அவை யாவும் எடு என்பதே சரி) அவை - பன்மை , யாவும் - ஒருமை, எடு - ஒருமை )
அவை யாவையும் எடுங்கள் -
தவறு (அவை யாவையும் எடு என்பதே சரி) அவை - பன்மை, யாவையும் - பன்மை, எடு - ஒருமை

அவை யாவற்றையும் எடுங்கள் –
சரி (அவை - பன்மை, யாவற்றையும் - பன்மை)

**சொற்றொடர் வகைகளை அறிந்து, அவை எவ்வாறு பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படுகின்றனஎன்பதைப் பதிவு செய்க.**

விடை :
சொற்றொடர் வகைகளை சரிவர அறிந்தால் தால் தான் பிழையின்றிப் பேசவும் மரபு மாறாமல் எழுதுவதற்கும் பயன்படுகின்றன.

**வகைகள்**

வா - ஒரு சொல் தொடர்
வந்தான் - வினைமுற்றுத் தொடர்
வரச்சொன்னான் - வினையெச்சத் தொடர்
வாவா - அடுக்குத் தொடர்
வந்த மாணவன் - பெயரெச்சத் தொடர்

**பயன்பாடு**

வா - கட்டளைத் தொடராக
வந்த - பள்ளிக்கு வந்த மாணவன் |
வந்து - பள்ளிக்கு வந்து சென்ற மாணவன்
வரச்சொன்னான் - அவன் தான் வரச்சொன்னான்
வருக வருக என வரவேற்றான்

**அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.**

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் திகழ்கின்றது. (திகழ்)
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் கலந்து கொள்வாள். (கலந்துகொள்)
3. உலகில் மூவாயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. (பேசு)
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா சென்றார்கள். (செல்)
5. தவறுகளைத் திருத்தினான். (திருத்து)

## 10ம் வகுப்பு இயல் 1 பழைய புத்தகம்

### 1. செய்வினைத்தொடர்

- “குடியரசுத் தலைவர் உலகத் தமிழ் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்."
- இத்தொடரில்,
- குடியரசுத் தலைவர் – எழுவாய்
- உலகத் தமிழ் மாநாடு – செயப்படுபொருள்
- தொடங்கிவைத்தார் – பயனிலை
- இவ்வாறாக எழுவாய், செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர் செய்வினைத் தொடர் எனப்படும். செயப்படுபொருளோடு இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) வெளிப்பட்டு வரும். சில தொடர்களில் மறைந்தும் வரும்.
- (எ–டு) மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார்.

1. செயப்பாட்டு வினைத்தொடர் (செயப்படுபொருள் வினைச்சொல்லைக்கொண்டு முடிவது)

- உலகத்தமிழ் மாநாடு குடியரசுத் தலைவரால் தொடங்கி வைக்கப்பெற்றது.
- இத்தொடரில் சொற்கள் செயப்படுபொருள், எழுவாய், பயனிலை என்னும் வரிசையில் அமைந்துள்ளன. எழுவாயோடு 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும் உள்ளது. இவ்வகைத் தொடர்களில் பயனிலையோடு படு, பட்டது, பெறு, பெற்றது என்னும் துணைவினைகளுள் ஒன்று சேர்ந்து வரும்.

1. தன்வினைத்தொடர் (எழுவாய், தானே செய்யும் தொழிலை உணர்த்துவது)

- பாத்திமா திருக்குறள் கற்றாள்.
- இத்தொடரிலுள்ள பாத்திமா என்னும் எழுவாய், ஒரு செயலைத் தானே செய்வதனால், இது தன்வினைத்தொடராகும்.

1. பிறவினைத்தொடர் (எழுவாய், ஒரு செயலைப் பிறரைக்கொண்டு செய்விப்பது)

- பாத்திமா திருக்குறள் கற்பித்தாள். இது பிறவினைத்தொடர். பாத்திமா என்னும் எழுவாய், அச்செயலைப் பிறரைக் கொண்டு செய்விப்பதனால், இது பிறவினைத்தொடராகும்.

## அலகு 3

## 3. ஒருமை பன்மை

### 9ம் வகுப்பு ஒருமை பன்மை

பிழை நீக்கி எழுதுக :

1. மதீனா சிறந்த இசைவல்லுநர் வேண்டும்

விடை : மதீனா சிறந்த இசைவல்லுநராக வேண்டும்

2. நல்ல தமிழுக்கு எழுதுவோம்

விடை : நல்ல தமிழில் எழுதுவோம்

3. பவள விழிதான் பரிசு உரியவள்.

விடை : பவளவிழிதான் பரிசுக்கு உரியவள்.

4. துன்பத்தால் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்

விடை :துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவன் தான் வெற்றியைப் பெறுவான்.

5. குழலியும் பாடத் தெரியும்

விடை :குழலிக்கும் பாடத் தெரியும்

### 9ம் வகுப்பு இயல் 2 பழைய புத்தகம்

பிழை நீக்கி எழுதுதல்

- ஒருவர் பேசும்போதும் எழுதும்போதும் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வேண்டும்.
- பேச்சில் அல்லது எழுத்தில் பிழையிருப்பின் பொருள் மயக்கம் ஏற்படும். எனவே, சொற்களிலும் தொடர்களிலும் பிழைவராமல் காத்தல் வேண்டும்.
- திணை, பால், எண், இடம், காலம், மரபு ஆகியன பிழையாக வாராமல் தொடரை எழுதுதல் வேண்டும்.

- எழுவாய் உயர்திணையாக இருந்தால் பயனிலையும் உயர்திணையாக இருத்தல் வேண்டும்.
- (எ.கா.) பொன்னன் தொடரோட்டத்தில் கலந்துகொண்டான்.
- எழுவாய் அஃறிணையாக இருந்தால் பயனிலையும் அஃறிணையாக இருத்தல் வேண்டும்.
- (எ.கா.) பசு புல் மேய்ந்தது.
- எழுவாய், ஐம்பால்களுள் எந்தப் பாலில் உள்ளதோ அதற்கேற்பப் பயனிலையைப் பெறல் வேண்டும்.
- அழகன் பாடினான். வள்ளி ஆடினாள். புலவர்கள் பாடல்களை இயற்றினார்கள். யானை பிளிறியது.
- மான்கள் ஓடின.
- எழுவாய் கள் விகுதி பெற்றால் பயனிலையும் கள் விகுதி பெறுதல் வேண்டும்.
- எழுவாய் - அர் விகுதி பெற்றால் பயனிலையும் - அர் விகுதி பெறுதல் வேண்டும்.
- மாணவர்கள் சிறப்பாகத் தேர்வு எழுதினார்கள். மூவர் தேவாரத்தைப் பாடினர்.
- எழுவாய் ஒருமையாக இருந்தால் பயனிலையும் ஒருமையாக இருத்தல் வேண்டும்.
- எழுவாய் பன்மையாக இருந்தால் பயனிலையும் பன்மையாக இருத்தல் வேண்டும்.
- என் புத்தகம் இதுவன்று. என் புத்தகங்கள் இவையல்ல.
- தொடரில் காலவழு ஏற்ட்டிமேல் காத்தல் வேண்டும்.
- (எ.கா.)
- தலைவர் நாளை மதுரையில் பேசுவார். நேற்று மழை பொழிந்தது.

## 10ம் வகுப்பு இயல் 1 பழைய புத்தகம்

tnpscbooks

ஒருமை பன்மைப் பிழையற்ற தொடர் எது?

1. அவன் கவிஞன் அல்ல.
2. அவன் கவிஞன் அன்று.
3. அவன் கவிஞன் அல்லன்.

## 12ம் வகுப்பு பழைய புத்தகம் உரைநடைப் பகுதி இயல் 2

வாக்கியத்தில் உண்டாகும் பிழைகளும் நீக்கமும்:

- வண்டிகள் ஒடாது–வண்டிகள் ஓடா
- அவை இங்கே உளது–அவை இங்கே உள
- அது எல்லாம்–அவை எல்லாம்
- மக்கள் கிடையாது–மக்கள் இல்லை
- வருவதும் போவதும் கிடையாது–வருவதும் போவதும் கிடையா
- ஒன்றோ அல்லது இரண்டோதருக–ஒன்றோ இரண்டோ தருக
- சென்னை என்ற நகரம்–சென்னை என்னும் நகரம்
- எனது மகன்–என் மகன்
- ஏற்கத்தக்கது அல்ல–ஏற்கத்தக்கது அன்று

- அவளது தந்தை–அவள் தந்தை

## அலகு 3(ii)

## 1. மரபுத்தமிழ் திணைமரபு உயர்திணை அஃறிணை

### 10ம் வகுப்பு இயல் 4 இலக்கணம் பொது

**இருதிணை**

- ஆறறிவுடைய மக்களை உயர்திணை என்றும் மற்ற உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் அஃறிணை (அல்திணை) என்றும் வழங்குவர்.

**ஐம்பால்**

- பால் என்பது திணையின் உட்பிரிவு ஆகும் (பால்–பகுப்பு, பிரிவு). இஃது ஐந்து வகைப்படும்.
- உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று பிரிவுகளை உடையது. அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் என இரு பிரிவுகளை உடையது.

**உயர்திணைக்குரிய பால் பகுப்புகள்**

- வீரன், அண்ணன், மருதன் – ஆண்பால்
- மகள், அரசி, தலைவி – பெண்பால்
- மக்கள், பெண்கள், ஆடவர் – பலர்பால்

**அஃறிணைக்குரிய பால் பகுப்புகள்**

- அஃறிணையில் ஒன்றனைக் குறிப்பது ஒன்றன்பால் ஆகும்.
- எ.கா. யானை, புறா, மலை
- அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் ஆகும்.
- எ.கா. பசுக்கள், மலைகள்

**மூவிடம்:**

- தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும்.

| | பெயர் / வினை | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| | தன்மைப் பெயர்கள் | நான், யான், நாம், யாம் ... |

**வழு – வழாநிலை – வழுவமைதி**

- இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.
- இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்
- இரு திணையும் ஐம்பாலும் மூவிடமும் காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும் தொடர்களில் இலக்கணப் பிழைகளுடன் வந்தால் அவையும் வழு எனப்படும். அவ்வாறு இலக்கணப் பிழைகள் இல்லாதிருப்பின் அவை வழாநிலை எனப்படும்.

| | வழு | வழாநிலை |
|---|---|---|
| திணை | செழியன் வந்தது | செழியன் வந்தான் |
| பால் | கண்ணகி உண்டான் | கண்ணகி உண்டாள் |
| இடம் | நீ வந்தேன் | நீ வந்தாய் |
| காலம் | நேற்று வருவான் | நேற்று வந்தான் |
| வினா | ஒரு விரலைக் காட்டிச் 'சிறியதோ? பெரியதோ?' என்று கேட்டல் | இரு விரல்களைக் காட்டி 'எது சிறியது? எது பெரியது?' என்று கேட்டல் |
| விடை | 'கண்ணன் எங்கே இருக்கிறார்?' என்ற வினாவிற்குக் கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று விடையளித்தல் | கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் கண்ணன் வீட்டிற்குள் இருக்கிறார் என்று விடையளித்தல் |
| மரபு | தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம் என்று கூறுதல் | தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோப்பு என்று கூறுதல் |

## வழுவமைதி

- இலக்கணமுறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதியாகும்.

### 1. திணை வழுவமைதி

- "என் அம்மை வந்தாள்" என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது திணைவழுவமைதி ஆகும். இங்கு உவப்பின் காரணமாக அஃறிணை, உயர்திணையாகக் கொள்ளப்பட்டது.

### 2. பால் வழுவமைதி

- "வாடா இராசா, வாடா கண்ணா" என்று தன் மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது பால்வழுவமைதி ஆகும். இங்கு உவப்பின் காரணமாகப் பெண்பால், ஆண்பாலாகக் கொள்ளப்பட்டது.

### 3. இட வழுவமைதி

- மாறன் என்பான் தன்னைப்பற்றிப் பிறரிடம் கூறும்போது,"இந்த மாறன் ஒருநாளும் பொய் கூறமாட்டான்" என, தன்மையினைப் படர்க்கை இடத்தில் கூறுவது இடவழுவமைதி ஆகும்.

### 4. கால வழுவமைதி

- குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்.
- இத்தொடர், குடியரசுத் தலைவர் நாளை வருவார் என அமைதல் வேண்டும். அவ்வாறு அமையவில்லை என்றாலும் நாம் பிழையாகக் கருதுவதில்லை. ஏனெனில் அவரது வருகையின் உறுதித்தன்மை நோக்கிக் காலவழுவமைதியாக ஏற்றுக்கொள்கிறோம்.

### 5. மரபு வழுவமைதி

- கத்துங் குயிலோசை – சற்றே வந்து
- காதிற் படவேணும்" – பாரதியார்.

- குயில் கூவும் என்பதே மரபு, குயில் கத்தும் என்பது மரபு வழு ஆகும். இங்குக் கவிதையில் இடம்பெற்றிருப்பதால் இது மரபு வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாடநூல் வினாக்கள் – பலவுள் தெரிக.

4. குலசேகர ஆழ்வார் "வித்துவக்கோட்டம்மா" என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் அகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே. –

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி

ஆ) இடவழுவமைதி – மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி

ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

## 9ம் வகுப்பு பழைய புத்தகம் இயல் 1

வழாநிலை, வழு, வழுவமைதி

- அ) வழாநிலை வழாநிலை, வழு, வழுவமைதி இலக்கண முறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும் செல்வன் படித்தான். இத்தொடரில் செல்வன் என்னும் ஆண்பால் படித்தான் என்னும் ஆண்பால் ஒருமை வினைமுற்றைக் கொண்டே முடிகிறது. எனமே இது வழாநிலை எனப்படும்.

வழாநிலை அறுவகைப்படும்.

- திணை வழாநிலை
- பால் வழாநிலை
- இட வழாநிலை
- கால வழாநிலை
- வினா வழாநிலை
- விடை வழாநிலை
- ஆ) வழு செல்வி பாடினாள், மாடு வந்தது. கண்ணன் வந்தான், நாய் ஓடியது. நான் வந்தேன், நீ வருவாய். எனக் மரபு
- இ) நாளை வருவேன், நேற்றுப் படித்தேன். : தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? : தமிழ்நாட்டின் தலைநகரம் எது ? என்னும் வினாவுக்குச் என சென்னை என விடையளித்தல்.
- இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும். வழு திணைவழு, பால்வழு, இடவழு, காலவழு, வினா வழு, விடைவழு, மரபுவழு என ஏழுவகைப்படும்.

திணைவழு என் மாமா வந்தது. மாமா என்னும் உயர்திணைப் பெயர், வந்தது என்னும் அஃறிணை வினைகொண்டு முடிந்தது. அதனால், இது திணைவழு.

பால்வழு

- கண்ணகி வந்தான். கண்ணகி என்னும் பெண்பாற் பெயர், வந்தான் என்னும் ஆண்பால் வினைகொண்டு முடிந்துள்ளது. அதனால், இது பால்வழு.

இடவழு

- நாங்கள் வந்தார்கள். நாங்கள் என்பது தன்மையிடத்துப் பன்மைப் பெயர். அப்பெயர், வந்தார்கள் என்னும்' படர்க்கையிடத்துப் பலர்பாலொடு முடிந்துள்ளது. எனவே, இத்தொடர் இடவழு.

கால வழு

- கரிகாலன் நாளை வந்தான். 'இத்தொடரில் நாளை என்னும் எதிர்காலப் பெயரொடு வந்தான் என இறந்தகால வினை மயங்கி வந்துள்ளது. அதனால், இது காலவழு.

வினாவழு

- முட்டையிட்டது சேவலா? பெட்டையா?
- சேவல் எனப் பொருத்தமில்லாத வினாவைக் கேட்டதனால் வினாவழு.

விடைவழு

- நாளை பள்ளி திறக்கப்படுமா? என்னும் வினாவுக்கு என் அத்தைக்கு உடல்நலமில்லை எனக் கூறுவது விடைவழு ஆகும்.

மரபு வழு

- நாய் கத்தும். இத்தொடர் மரபு வழு ஏனெனில் நாய் குரைக்கும் என்பதே முறையான ஒலிமரபு

இ) வழுவமைதி

- இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதி ஆகும்.
- உவகை (மகிழ்ச்சி), சிறப்பு, உயர்வு, உறுதி, சினம் காரணமாகத் திணைவழுவும் பால்வழுவும் காலவழுவும் வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

சான்று

- சிற்றூர்களில் சிலர், தாங்கள் வளர்க்கும் விலங்குகளுக்குப் பெயரிட்டு அழைக்கும் பழக்கம் உண்டு. வருகின்ற பசுவைப் பார்த்து 'என் இலட்சுமி வந்துவிட்டாள்' எனக் கூறுவதனைக் கேட்டிருப்பீர்கள்.
- இவ்வாறு கூறுவது, திணைவழுவாயினும் மகிழ்ச்சியின் காரணமாகத் திணைவழுவமைதியாக ஏற்றுக்கொள்கிறோம்.
- 2. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் – இத்தொடர், குடியரசுத் தலைவர் நாளை வருவார் என அமைதல் வேண்டும். அவ்வாறு அமையவில்லையென்றாலும் நாம் பிழையாக கருதுவதில்லை.
- ஏனெனில், அவரது வருகையின் உறுதித்தன்மை நோக்கிக் காலவழுவமைதியாக ஏற்றுக்கொள்கிறோம்.
- வழு – பிழை, தவறு, குற்றம்
- வழாநிலை – பிழையின்மை, தவறின்மை
- வழுவமைதி – பிழை – ஆனால், பிழையாகக் கொள்ளாமை.

பயிற்சி : பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

அ) கண்ணன், கயல்விழி, மாணவர்கள், காகம்.

ஆ) மாடு கத்தும், யானை பிளிறும், குயில் கொஞ்சும், மயில் அகவும்.

இ) கூவும், கனைக்கும், கரையும், அகவும், அலறும்.

ஈ) குழந்தை, குட்டி, மனிதன், பார்ப்பு.

## 11ம் வகுப்பு பழைய புத்தகம் பக்க எண் 114

1. மரபுப் பிழைகளை அறிந்து நீக்குக.
2. தென்னை இலையால் கீற்றுப் பின்னுவார்கள்.
3. அம்பு வீசி மான்குட்டியைக் காயப்படுத்தினாள்.
4. தோட்டத்தில் உள்ள வாழைச் செடி பார்க்க அழகாக உள்ளது.
5. பனந்தோட்டத்தில் ஆந்தை அகவுவது கேள்.
6. கஞ்சி சாப்பிட்டால் காய்ச்சலுக்கு நல்லது.

விடை

1. தென்னை ஓலையால் கீற்றுப் பின்னுவார்கள்
2. அம்பு எய்து மான்குட்டியைக் காயப்படுத்தினாள்
3. தோட்டத்தில் உள்ள வாழை மரம் பார்க்க அழகாக உள்ளது
4. பனந்தோட்டத்தில் ஆந்தை அலறுவது கேள்
5. கஞ்சி குடித்தால் காய்ச்சலுக்கு நல்லது

## 6ம் வகுப்பு பருவம் 3 இயல் 1

கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.

| | | |
|---|---|---|
| பாரி | | வந்தன |
| எழிலி | | வந்தான் |
| மாணவர்கள் | வீட்டுக்கு | வந்தது |
| மாடு | | வந்தார்கள் |
| மாடுகள் | | வந்தாள் |

விடை

1. பாரி வீட்டுக்கு வந்தான்
2. எழிலி வீட்டுக்கு வந்தாள்
3. மாணவர்கள் வீட்டுக்கு வந்தார்கள்
4. மாடு வீட்டுக்கு வந்தது
5. மாடுகள் வீட்டுக்கு வந்தன

## 6ம் வகுப்பு பருவம் 3 இயல் 3

கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.

| | | |
|---|---|---|
| நேற்று<br>இன்று<br>நாளை | எங்கள் ஊரில் மழை | பெய்கிறது<br>பெய்யும்<br>பெய்தது |

- நேற்று எங்கள் ஊரில் மழை பெய்தது
- இன்று எங்கள் ஊரில் மழை பெய்கிறது
- நாளை எங்கள் ஊரில் மழை பெய்யும்

# அலகு 3(ii)

## 2.ஒலிமரபு

### 7ம் வகுப்பு பழைய புத்தகம் (பக்க எண் 84)

**சொற்றொடர் பொருத்தம்**

சொற்கள் சேர்ந்தமைவது சொற்றொடராகும். ஒரு சொற்றொடரிலுள்ள எழுவாய், அதன் பயனிலையோடு திணை, பால், எண், இடங்களில் பொருத்தமாக அமைதல் வேண்டும். இவையே வழுவற்ற சொற்றொடர்களாம்.

**திணைப் பொருத்தம்**

கோலமயில் ஒயிலாக ஆடியது

(கோலமயில் – அஃறிணை எழுவாய், ஆடியது – அஃறிணைப் பயனிலை

**பால் பொருத்தம்**

வண்டுகள் தேன் குடித்தன

வண்டுகள் – பலவின் பால் எழுவாய், குடித்தன – பலவின் பால் பயனிலை

**எண் பொருத்தம்**

விண்கலங்கள் விண்ணில் பறந்தன

விண்கலங்கள் எழுவாய்ப் பன்மை, பறந்தன – பன்மைப் பயனிலை

**இடப்பொருத்தம்**

அவன் பாடம் படித்தான்

அவன் – படர்க்கை எழுவாய், படித்தான் – படர்க்கைப் பயனிலை

**சிறப்புப் பொருத்தம்**

பாவேந்தர் பாரதியைப் புகழ்ந்து பாடினார். பாவேந்தர் என்னும் பெயர் பாரதிதாசனையே குறிக்கும் என்பதனால். அது சிறப்புப் பெயராயிற்று. சிறப்புப் பொருத்தம் உயர்வுமட்டுமல்லாது இழிவு கருதியும் வரும்.

எ.கா. முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா.

### 6ம் வகுப்பு பருவம் 2 இயல் 2

### பறவைகளின் ஒலிமரபு

- ஆந்தை அலறும்
- சேவல் கூவும்
- கோழிகொக்கரிக்கும்
- மயில் அகவும்
- கூகை குழறும்

காகம் கரையும்

குயில் கூவும்

புறா குனுகும்

கிளி பேசும்

**தொகை மரபு**

மக்கள் கூட்டம் ஆநிரை ஆட்டு மந்தை

**வினைமரபு**

சோறு உண் தண்ணீர் குடி

பூக் கொய் முறுக்குத் தின்

கூடை முடை இலை பறி

சுவர் எழுப்பு பால் பருகு
பானை வனை

**சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கோழி …………………….. (கூவும் / கொக்கரிக்கும்)
2. பால் …………………….. (குடி / பருகு)
3. சோறு …………………….. (தின்/ உண்)
4. பூ …………………….. (கொய் / பறி)
5. ஆ …………………….. (நிரை / மந்தை )

**மரபுப் பிழையை நீக்கி எழுதுக.**

சேவல் கொக்கரிக்கும் சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூப்பறிக்க நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கரைந்து கொண்டிருந்தது. பூவைப் பறித்ததுடன், தோரணம் கட்ட மாவிலையையும் கொய்து கொண்டு வீடு திரும்பினாள், அம்மா தந்த பாலைக் குடித்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

விடை

சேவல் கூவும் சத்தம் கேட்டுக்கயல் கண்விழித்தாள். பூக்கொய்ய நேரமாகிவிட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கூவிக் கொண்டிருந்தது. பூவைக் கொய்ததுடன், தோரணம் கட்ட மாவிலையையும் பறித்துக்கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைப் பருகிவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்

## 8ம் வகுப்பு இயல் 1

**1. பறவைகளின் ஒலி மரபு.**

(எ.கா.) காரம் கரையும்.

- ஆந்தை அலறும்
- கிளி பேசும்
- குயில் கூவும்
- கூகை குழறும்
- கோழி கொக்கரிக்கும்
- சேவல் கூவும்
- புறா குனுகும்
- மயில் அகவும்

வண்டுமுரலும்

## 7ம் வகுப்பு பழைய புத்தகம் இயல் 6

**மரபுச் சொற்கள்**

- நம் முன்னோர் எப்பொருளை எச்சொல்லால் குறித்து வழங்கினார்களோ அப்பொருளை அச்சொல்லால் குறிப்பதே மரபு எனப்படும். மரபுச் சொற்களைப் பயன்படுத்தாமல் வேறு சொற்களைப் பயன்படுத்துவது மரபுப்பிழை.

- யானைக்கன்று என்பதே மரபுச் சொல். இதனை யானைக்குட்டி எனக் கூறுவது மரபுப்பிழை.

**இளமை மரபுச் சொற்கள்**

**தாவரங்கள் : காய்களின் இளமை மரபு**

| | |
|---|---|
| அவரைப்பிஞ்சு | கத்தரிப்பிஞ்சு |
| வாழைக்கச்சல் | வெள்ளரிப்பிஞ்சு |
| தென்னங்குரும்பை | மாவடு |

**விலங்குகள் இளமை மரபு**

| | |
|---|---|
| குருவிக்குஞ்சு | கோழிக்குஞ்சு |
| ஆட்டுக்குட்டி | கழுதைக்குட்டி |
| எருமைக்கன்று | பன்றிக்குட்டி |
| மான்கன்று | நாய்க்குட்டி |
| பூனைக்குட்டி | சிங்கக்குருளை |
| புலிப்பறழ் | கீரிப்பிள்ளை |
| ஒலி மரபுச் சொற்கள் | குயில் கூவும் |
| மயில் அகவும் | காகம் கரையும் |
| கிளி கொஞ்சம் | கூகை குழறும் |
| குதிரை கனைக்கும் | சிங்கம் முழங்கும் |
| நரி ஊளையிடும் | யானை பிளிறும் |
| வினைமரபுச்சொற்கள் | அப்பன்தின் |
| காய்கறி அரி | இலை பறி |
| நெல் தூற்று | களை பறி |
| பழம் தின் | நீர் பாய்ச்சு |
| பாட்டுப்பாடு | மலர் கொய் |

**பயிற்சி பொருத்துக**

1, காகம் – கரையும்
2, குதிரை – கனைக்கும்
3, சிங்கம் – முழுங்கும்
4, நரி – ஊளையிடும்
5, குயில் – கூவும்

**8ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் 1 இயல் 3 பக்க எண் 78**

**மொழித்திறன் பயிற்சி**

**மரபுச்சொற்கள்**

- யானைக்குட்டி, யானைக்கன்று மேற்காணும் இருசொற்களில் மரபு பிறழ்ந்த சொல்லை உங்களால் கண்டறிய முடிகிறதா?
- யானைக்குட்டி என்பது மரபு பிறழ்ந்த சொல். யானைக்கன்று என்பதே மொழிமரபுக்கு ஏற்ற சொல்.

- முன்னோர் எச்சொல்லை எப்படி வழங்கினரோ அச்சொல்லை அப்படியே ஏற்று நாமும் வழங்குதல் மரபு.
- நாம் நாள்தோறும் பயன்படுத்தும் மரபுச்சொற்கள் சிலவற்றை அறிவோம்.

விலங்குகளின் இளமைப்பெயர்கள்

- அணிற்பிள்ளை, யானைக்கன்று, நாய்க்குட்டி, கீரிப்பிள்ளை, மான்கன்று, பூனைக்குட்டி, கழுதைக்குட்டி, பன்றிக்குட்டி, சிங்கக்குருளை, எருமைக்கன்று, ஆட்டுக்குட்டி, எலிக்குட்டி, புலிப்பறழ், குதிரைக்குட்டி, குரங்குக்குட்டி.

விலங்குகளின் வாழிடங்கள்

- ஆட்டுப்பட்டி, குதிரைக்கொட்டில், கோழிப்பண்ணை, யானைக்கூடம், மாட்டுத்தொழுவம், வாத்துப்பண்ணை.

விலங்கு பறவை இனங்களின் ஒலிமரபு

- ஆந்தை அலறும், கழுதை கத்தும், காக்கை கரையும், கிளி கொஞ்சும்/பேசும், சிங்கம் முழங்கும், குதிரை கனைக்கும், நரி ஊளையிடும், குயில் கூவும், புலி உறுமும், கோழி கொக்கரிக்கும், மயில் அகவும், யானை பிளிறும்.

தாவர உறுப்புப் பெயர்கள்

- ஈச்ச ஓலை, சோளத்தட்டை, மாவிலை, வேப்பந்தழை, அவரைப்பிஞ்சு, தென்னங்குரும்பை, தாழை மடல், தென்னையோலை, மூங்கில் இலை, பனையோலை, பலாஇலை, வாழைஇலை, கமுகங்கூந்தல், நெற்றாள், மாவடு, வாழைக்கச்சல், முருங்கைப்பிஞ்சு, வெள்ளரிப்பிஞ்சு.

செடி கொடி மரங்களின் தொகுப்பிடம்

- ஆலங்காடு, கம்பங்கொல்லை, பனந்தோப்பு, சவுக்குத்தோப்பு, தென்னந்தோப்பு, சோளக்கொல்லை.

தாவர உறுப்புப் பெயர்கள்

- ஈச்ச ஓலை, சோளத்தட்டை, மாவிலை, வேப்பந்தழை.

காய்களின் இளநிலை

- அவரைப்பிஞ்சு, தென்னங்குரும்பை, முருங்கைப்பிஞ்சு, வாழைக்கச்சல், வெள்ளரிப்பிஞ்சு.

செடி கொடி மரங்களின் தொகுப்பிடம்

- தாழை மடல், தென்னையோலை, மூங்கில் இலை, கமுகங்கூந்தல், பனையோலை, பலாஇலை, வாழை இலை, நெற்றாள், மாவடு.

பொருள்களின் தொகுப்பு

- கம்பங்கொல்லை, பனந்தோப்பு, சவுக்குத்தோப்பு, தென்னந்தோப்பு, சோளக்கொல்லை, தேயிலைத்தோட்டம், பலாத்தோப்பு, பூந்தோட்டம், கற்குவியல், வேலங்காடு, சாவிக்கொத்து, ஆட்டுமந்தை, திராட்சைக்குலை, மாட்டுமந்தை, பசுநிரை, யானைக்கூட்டம்.

பொருளுக்கேற்ற வினை மரபு

- சோறு உண், பழம் தின், நீர் குடி, பால் பருகு, கோலம் இடு, பாட்டுப் பாடு, படம் வரை, கவிதை இயற்று, தீ மூட்டு, விளக்கை ஏற்று, தயிர் கடை, கூரை வேய்.

1. பொருத்தமான மரபுச்சொல்லைத் தேர்ந்தெழுதுக.

அ) குமரன் பழம் ___ (உண்டான், தின்றான்) தின்றான்

ஆ) காலையில் சேவல் ___ (கூவியது, கத்தியது) கூவியது

இ) ஆட்டு ___ (கூட்டம், மந்தை) வருகிறது மந்தை

ஈ) எங்கள் ஊரில் வாழைத் ___ (தோட்டம், தோப்பு) உள்ளது தோப்பு

உ) குயில் ___ (கூவியது, அகவியது) கூவியது

1. கீழுள்ள பெயர்களுக்கு உரிய இளமைப் பெயர்களை எழுதுக.

அ) கீரி ஆ) மான் இ) சிங்கம் ஈ) பூனை உ) எருமை

விடை: கீரிப்பிள்ளை, மான்கன்று, சிங்கக்குருளை, பூனைக்குட்டி, எருமைக்கன்று

1. பொருத்துக

அ) மக்கள்–கூட்டம்

ஆ) வீரர் –படை

இ) விறகு – கட்டு

ஈ) சுள்ளி – கற்றை

உ) வைக்கோல் –போர்

## 10 ம் வகுப்பு பழைய புத்தகம் இயல் 9 பக்க எண் 222

மொழித்திறன் பயிற்சி

மரபுச்சொற்கள்

- பறவைகள், விலங்குகள் முதலான உயிரினங்களின் ஒலிகளையும் அவை ஒலிக்கும் முறைகளையும் இவ்வாறு கூற வேண்டுமென, முன்னோர் கூறிய மரபினைத் தொன்றுதொட்டுப் பின்பற்றி வருகின்றனர். "நாய் கத்தியது" எனக் கூறுகிறோம். அவ்வாறு கூறுதல் கூடாது. "நாய் குரைத்தது" என்பதே உரிய மரபுத்தொடர். இவ்வாறு வரும் சில மரபுகள் குறித்து இங்குக் காண்போம்.

ஒலிமரபு

| விலங்கு | ஒலி |
|---|---|
| ஆடு | கத்தும் |
| எருது | எக்காளமிடும் |
| குதிரை | கனைக்கும் |
| ஆந்தை | அலறும் |
| காகம் | கரையும் |
| கிளி | பேசும் |
| குரங்கு | அலப்பும் |
| சிங்கம் | முழங்கும் |

| | |
|---|---|
| நரி | ஊளையிடும் |
| புலி | உறுமும் |
| குயில் | கூவும் |
| கூகை | குழறும் |
| கோழி | கொக்கரிக்கும் |
| சேவல் | கூவும் |
| பூனை | சீறும் |
| யானை | பிளிறும் |
| எலி | கீச்சிடும் |
| புறா | குனுகும் |
| மயில் | அகவும் |
| வண்டு | முரலும் |

**வினை மரபு**

- அம்பு எய்தார், சோறு உண்டான், ஆடை நெய்தார், தண்ணீர் குடித்தான், உமி கருக்கினாள், ஓவியம் புனைந்தான், கூடை முடைந்தார், சுவர் எழுப்பினான், செய்யுள் இயற்றினான், பால் பருகினாள், பூப் பறித்தாள், மரம் வெட்டினான், மாத்திரை விழுங்கினான், முறுக்குத் தின்றான்.

## அலகு 3(ii)
## 3.நிறுத்தற்குறியீடுகள்
### 7ம் வகுப்பு பழைய புத்தகம் பக்க எண் 192

tnpscbooks

**நிறுத்தற்குறிகள்**

- செய்யுளையோ உரைநடையையோ படிக்கும் போது பொருளைத் தெளிவாகப் புரிந்து படிக்கவும், உரிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் பயன்படுத்துவது நிறுத்தக்குறிகளாகும்.ற நிறுத்தக்குறிகளுள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

**முற்றுப்புள்ளி( . )**

- ஒரு தொடர் முற்றுப் பெற்றதனைக் குறிக்க முற்றுப்புள்ளி இடுதல் வேண்டும்
- (எ.கா) கண்ணன் பள்ளிக்குச் சென்றான்

**காற்புள்ளி( , )**

- பல பொருள்களைத் தொடர்ந்து சொல்லும் போது ஒவ்வொன்றின் பின்னும் காற்புள்ளி இடுதல் வேண்டும்(கடைசிச் சொல்லுக்குப்பின் காற்புள்ளி தேவையில்லை)
- (எ.கா) மா, பலா, வாழை முக்கனிகள்

**அரைப்புள்ளி ( ; )**

- ஓர் எழுவாய் பல பயனிலைகளைக் (வினைமுற்றுகளை) கொண்டு முடியும் பொழுது, ஒவ்வொரு பயனிலைக்குப் பின்னரும் அரைப்புள்ளி இடுதல் வேண்டும்.

- (எ.கா) சிந்தனைச்செல்வன் நன்றாகப் படித்தான்; முதல் மதிப்பெண் பெற்றான்; பரிசு கிடைத்தது.

**வினாக்குறி ( ? )**

- ஒரு வினாத்தொடரின் இறுதியில் வினாக்குறி இடுதல் வேண்டும்.
- (எ.கா) பொற்கொடி பாடம் படித்துவிட்டாயா?

**உணர்ச்சிக்குறி ( ! )**

- ஒரு செய்தியை உணர்ச்சியாகக் கூறும்போது உணர்ச்சிக் குறியிடுதல் வேண்டும்.
- (எ.கா) என்னே, இப்பூவின் மணம்!

**ஒற்றை மேற்கோள் குறி ( ' ... ')**

- ஓர் எழுத்தையோ சொல்லையோ சொற்றொடரையோ தனியே குறிக்கும் இடத்திலும், ஒரு சொற்றொடரில் நூலின் பெயர், பழமொழி முதலியன வருமிடத்திலும் ஒற்றை மேற்கொள் குறி இடுதல் வேண்டும். 'எழில்' என்றால் 'அழகு' என்பது பொருள்
- பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' மிகச் சிறந்த படைப்பு. 'சுத்தம் சோறு போடும்' என்பது பழமொழி. வண்ணமிடும் போதும் தடித்த எழுத்துகளில் எழுதும் போதும், அடிக்கோடு இடும்போதும் இக்குறி இடத் தேவையில்லை

**இரட்டை மேற்கோள் குறி ("....")**

- ஒருவர் கூறியதனை நேர் கூற்றாகக் கூறும் போதும், ஒரு தொடரை மேற்கோளாகக் கூறும் போதும் இரட்டை மேற்கோள் குறியிடுதல் வேண்டும். " அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்றார் ஔவையார்.

## 8ம் வகுப்பு பழைய புத்தகம் இயல் 2 பக்க எண் 42

அறிந்து கொள்வோம்!

அச்சுப்பிழை திருத்தக்குறியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| ⊙ | முற்றுப்புள்ளி இடுக.. | ~ | பத்திகளை இணைக்க. |
| : | இரு புள்ளிகளைச் சேர்க்க. | # | இடைவெளி விடுக. |
| ?/ | வினா அடையாளம் இடுக. | ኄ | எழுத்தையோ சொல்லையோ சேர்க்கவும். |
| (90) | எண்ணை எழுத்தாக எழுதுக. | D | எழுத்தையோ, சொல்லையோ நீக்குக. |
| (இருபது) | எழுத்தை எண்ணாக எழுதுக. | S.c | பெரிய எழுத்தைச் சிறிய எழுத்தாக்குக. |
| = | வரிசை நேர் செய்க. | Bold | தடித்த எழுத்தில் மாற்றுக. |
| ⁀‿ | இடைவெளியின்றிச் சேர்க்க. | stet | உள்ளது உள்ளவாறே இருத்தல். |

## 8ம் வகுப்பு பழைய புத்தகம் இயல் 2 பக்க எண் 58

**கீழ்க்காணும் பத்தியில், நிறுத்தக்குறிகளைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துக.**

மரத்துக்குப் பின்னால் மறைந்திருந்த முல்லா இப்போது மெதுவாக வெளியில் வந்தார் ஐயா வாழ்க்கையில் ஒரு நிமிடம்கூட மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை என்று

வருத்தப்பட்டீரே உங்கள் வருத்தத்தை நீக்குவதற்காகத்தான் நான் பணப்பையைப் பறித்துக் கொண்டு ஓடினேன் பறிபோய் விட்டதாக நீங்கள் நினைத்துக் கொண்டிருந்த செல்வம் திரும்பக் கிடைத்ததும் உங்கள் மனநிலை எப்படி இருந்தது நீங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடுஇணையே இல்லை அல்லவா என்று முல்லா கேட்டார்

விடை

மரத்துக்குப் பின்னால் மறைந்திருந்த முல்லா இப்போது மெதுவாக வெளியில் வந்தார். "ஐயா, வாழ்க்கையில் ஒரு நிமிடம்கூட மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை என்று வருத்தப்பட்டீரே! உங்கள் வருத்தத்தை நீக்குவதற்காகத்தான் நான் பணப்பையைப் பறித்துக் கொண்டு ஓடினேன். பறிபோய் விட்டதாக நீங்கள் நினைத்துக் கொண்டிருந்த செல்வம் திரும்பக் கிடைத்ததும் உங்கள் மனநிலை எப்படி இருந்தது? நீங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடுஇணையே இல்லை அல்லவா?" என்று முல்லா கேட்டார்.

## 8ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் 3 இயல் 3

### 1. நிறுத்தக்குறிகள்

நாம் பேசும்போது கருத்துகளுக்கேற்ப, நிறுத்திப் பேசுகிறோம். எழுதும்போது, நிறுத்துமிடங்களைக் காட்ட நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துகிறோம். இவற்றைக் குறிக்காவிடில், சொற்றொடரின் பொருளைப் புரிந்துகொள்வதில் குழப்பம் ஏற்படும்.

## 9ம் வகுப்பு இயல் 9

### பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

விடை

சேரர்களின் பட்ட பெயர்களில் "கொல்லி வெற்பன்", "மலையமான்" போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

## 8ம் வகுப்பு இயல் 4

### நிறுத்தக்குறிகள்

### காற்புள்ளி (,)

- பொருள்களை எண்ணும் இடங்களில் காற்புள்ளி வரும்.
- (எ.கா) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன ஐந்திணைகள்.
- கடிதத்தில் விளி முன் காற்புள்ளி வரும்.(எ.கா.) அன்புள்ள நண்பா,
- வினையெச்சங்களுக்குப் பின் காற்புள்ளி வரும்.
- (எ.கா.) பொழிலன் தோட்டத்திற்குச் சென்று, வாழை இலை பறித்து வந்தான்.

- மேற்கோள் குறிகளுக்கு (*) முன் காற்புள்ளி வரும்.
- (எ.கா.) குழந்தை நிலவைப் பார்த்து,"நிலா நிலா ஓடி வா" என்று பாடியது.
- முகவரியில் இறுதி வரி நீங்க ஏனைய வரிகளின் இறுதியில் காற்புள்ளி வரும்.
- (எ.கா)ச.ஆண்டான், எஸ் 45, காமராசர் தெரு, திருவள்ளூர்.

அரைப்புள்ளி (;)

- ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடரும் இடத்தில் அரைப்புள்ளி வரும்.
- (எ.கா.) கரிகாலன் சுங்கை வரை படையெடுத்துச் சென்றான்; கனக விசயருடன் போரிட்டான்.
- உடன்பாடு, எதிர்மறைக் கருத்துகளை ஒன்றாகக் கூறும் இடத்தில் அரைப்புள்ளி வரும்.
- (எ.கா.) நல்லவன் வாழ்வான், தீயவன் தாழ்வான்.

முக்காற்புள்ளி ( : )

- சிறு தலைப்பான தொகைச் சொல்லை விரித்துக் கூறும் இடத்தில் முக்காற்புண்ணி வரும்.
- (எ.கா.) முத்தமிழ் இயல், இசை, நாடகம்.

முற்றுப்புள்ளி (.)

- சொற்றொடரின் இறுதியில் முற்றுப்புள்ளி வரும்.
- (எ.கா.) கல்வியே மனிதனின் வாழ்வை உயர்த்தும்.
- சொற்குறுக்கங்களை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.
- (எ.கா.) திரு. வி.க. மா.க.அ. ஊ.ஒ.ந.நி.பள்ளி
- பெயரின் தலைப்பெழுத்தை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.
- (எ.கா.) நெ.து. சுந்தரவடிவேலு

வினாக்குறி ( ? )

- வினாப்பொருளை உணர்த்தும் வாக்கியத்தின் இறுதியில் வினாக்குறி இட வேண்டும்.
- (எ.கா) சேக்கிழார் எழுதிய நூல் எது?

வியப்புக்குறி ( ! )

- மகிழ்ச்சி, வியப்பு, அச்சம், அவலம், இரங்கல் முதலான உணர்ச்சியை வெளியிடும் இடங்களில் வியப்புக்குறி இட வேண்டும்.
- (எ.கா) தமிழின் இனிமைதான் என்னே! – வியப்பு
- பாம்பு: பாம்பு! – அச்சம்
- அந்தோ! இயற்கை அழிகிறதே! – அவலம்

ஒற்றை மேற்கோள் குறி (' ')

- தனிச் சொல்லையோ தனி எழுத்தையோ விளக்கிக் காட்டும்போதும், இரட்டை மேற்கோள் குறியில் இன்னொரு கூற்று உட்பட்டு வரும்போதும் ஒற்றை மேற்கோள் பயன்படும்.
- (எ.கா.) 'நல்ல' என்பது குறிப்புப் பெயரெச்சம் ஆகும்.
- கூட்டத்தின் தலைவர், "அறிஞர் அண்ணா அவர்கள் இப்போது 'தலைப்பில்லை என்னும் தலைப்பில் பேசுவார்" என்று அறிவித்தார்.

இரட்டை மேற்கோள்குறி (" ")

- நேர்கூற்றுகளிலும் செய்யுள் அடிகளையோ பொன்மொழிகளையோ குறிப்பிடும் இடங்களிலும் இரட்டை மேற்கோள் குறியைப் பயன்படுத்த வேண்டும்.
- (எ.கா) திரு. வி.க. மாணவர்களிடம்," தமிழ்க் காவியங்களைப் படியுங்கள்; இன்பம் நுகருங்கள்" என்று கூறினார்.

பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

1. பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்

பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்.

2. திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது.

3. தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது

தமிழ்மொழி செம்மையானது, வலிமையானது, இளமையானது.

4. கபிலன் தன் தந்தையிடம் இன்று மாலை விளையாடப் போகட்டுமா என்று கேட்டான்

கபிலன், "தன் தந்தையிடம் இன்று மாலை விளையாடப் போகட்டுமா?" என்று கேட்டான்.

5. திரு வி க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ்பெற்றது

திரு. வி. க. எழுதிய 'பெண்ணின் பெருமை' என்னும் நூல் புகழ்பெற்றது.

பின்வரும் பத்தியில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

நூல் பல கல் என்பர் பெரியோர் அறிவை வளர்க்கும் நூல்கள் அனைத்தையும் நம்மால் விலை கொடுத்து வாங்க முடியுமா முடியாது நூலகங்கள் இக்குறையை நீக்க உதவுகின்றன பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து நூல்களும் நிறைந்த இடம் நூலகம் ஆகும். நூலகத்தின் வகைகளாவன மையநூலகம் மாவட்ட நூலகம் கிளை நூலகம் ஊரிப்புற நூலகம் எனக்குப் பிடித்த நூல்களுடன் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியடைவேன் என்றார் நேரு ஆகவே நூலகத்தின் பயன் அறிவோம் அறிவு வளம் பெறுவோம்.

விடை

'நூல் பல கல்' என்பர் பெரியோர். அறிவை வளர்க்கும் நூல்கள் அனைத்தையும் நம்மால் விலை கொடுத்து வாங்க முடியுமா? முடியாது. நூலகங்கள் இக்குறையை நீக்க உதவுகின்றன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து நூல்களும் நிறைந்த இடம் நூலகமாகும். நூலகத்தின் வகைகளாவன மைய நூலகம், மாவட்ட நூலகம், கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம். 'எனக்கு பிடித்த நூல்களுடன் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியடைவேன்' என்றார் நேரு. ஆகவே, நூலகத்தின் பயன் அறிவோம்! அறிவு வளம் பெறுவோம்!

## 10ம் வகுப்பு இயல் 8

நிறுத்தக்குறிகள்

- இன்றுமுதல், தோசைக்குத் துவையல் இல்லை.
- இன்று முதல்தோசைக்குத் துவையல் இல்லை.

- இத்தொடர்களைப் பொருள் விளங்கும்படி படித்துப் பார்க்க. இருதொடர்களுக்கும் வேறுபாடு அறியமுடிகிறதல்லவா?
- முதல் தொடர் இன்று தொடங்கித் தோசைக்குத் துவையல் இல்லை எனவும், அடுத்ததொடர் முதல் தோசைக்கு மட்டும் துவையல் இல்லை எனவும் வெவ்வேறு பொருள் தருகிறதன்றோ?
- இரண்டு தொடரும் ஒன்றே ஆயினும், இருவேறு பொருள்கள் தரக் காரணம் நிறுத்தக் குறியீடு தானே!

காற்புள்ளி ( , )

- பொருள்களை எண்ணும் நிலை, வினையெச்சம், மேற்கோள் குறிகளுக்குமுன், ஆதலால் ஆகலே முதலிய சொற்களின்பின், முகவரியில் இறுதி வரி தவிர்த்த பிற இடங்களில் நீரே எழுவாயில் தொடர்கள் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும், ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்து எதிர்மறை கருத்தும் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும் அரைப்புள்ளி இடல் வேண்டும்.
- சிலப்பதிகாரம், செந்தமிழ்க் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், மூவேந்தரையும் பாடும் காப்பியம்
- இளமுருகு என்பான் நிறைய அறிவு உண்டு; பொறுமை இல்லை.
- அற்றை, விளக்குதல், சிறு தலைப்பு, நூற்பாதி எண் முதலியன விவரங்களைப்
- காற்புள்ளி இடுதல் வேண்டும்.
- (எ–டு) 1. நிலம், நீர், தீ, காற்று, வான் என்பன ஐம்பூதங்கள்.
- மகனே, நான் சொல்வதைக் கேள்.

அரைப்புள்ளி ( ; )

- ஒரே எழுவாயில் பல தொடர்கள் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும், ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்தும் எதிர்மறைக் கருத்தும் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும் அரைப்புள்ளி இடுதல் வேண்டும்.
- (எ–டு) 1. சிலப்பதிகாரம், செந்தமிழ்க் காப்பியம்; முத்தமிழ்க் காப்பியம்; மூவேந்தரையும் பாடும் காப்பியம்.
- 2. இளமுருகு என்பானிடம் நிறைய அறிவுண்டு; பொறுமை இல்லை.

முக்காற் புள்ளி ( : )

- ஒருவர் கூற்றை விளக்குதல், சிறு தலைப்பு, நூற்பகுதி எண் முதலியன விவரங்களைப் பட்டியல் முறையில் ஒன்றன்பின் ஒன்றாகத் தரும்போது முக்காற்புள்ளி இடுதல் வேண்டும்.
- (எ – டு) 1. முப்பால் என்பன வருமாறு: அறம், பொருள், இன்பம்.
- மத்தேயு, 8 : 3 : 6
- பெயர் : மணிமேகலை

முற்றுப்புள்ளி ( . )

- சொற்றொடர் இறுதி, முகவரி இறுதி, நாள் இறுதி, சொற் குறுக்கம், பெயர்த் தலைப்பெழுத்து முதலிய இடங்களில் முற்றுப்புள்ளி இடப்படும்.
- (எ–டு) 1. உருவு கண்டு எழுத வேண்டும்.

- மைதிலி, த/பெ. எ. முத்துகிருட்டினன், கறுப்பனார்கோவில் அருகில், பெரியகொல்லப்பட்டி, மல்லசமுத்திரம் மாவட்டம். (மாதிரி முகவரி)
- 20.10.2003.
- தொல். சொல். 25.
- எ. நாகம்மாள்.

வினாக்குறி (?)

- நாமக்கல் ஒரு வினாத்தொடர் முற்றுத்தொடராகவும் நேர்கூற்றுத் தொடராகவும் இருப்பின், இறுதியில் வினாக்குறி இடுதல் வேண்டும். (எ–டு)
- அங்கே படிப்பவர் யார்?
- நீ வருவாயா?

உணர்ச்சிக்குறி (!)

- வியப்பு, அவலம், வாழ்த்து, வரவேற்றல், வைதல் ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தொடர்களின்பின் (!) இக்குறி இடுதல் வேண்டும். (எ–டு)
- என்னே, இதன் பெருமை!
- பாம்பு பாம்பு!
- வருக வருக!
- வாழ்க வாழ்க!
- (!1, !!! இவ்வாறு ஒன்றுக்குமேற்பட்ட குறிகளை இடுதல் கூடாது.)

ஒற்றை மேற்கோள்குறி (')

- இக்குறி, தற்சுட்டின்கண்ணும் (ஓர் எழுத்தேனும் சொல்லேனும் சொற்றொடரேனும் தன்னையே குறித்தல்), பிறர் கூற்றாக வரும் இடத்தும், கட்டுரைப் பெயரும், நூற்பெயர் வருமிடத்தும் ஒற்றை மேற்கோள்குறி வரும்.
- 'ஏ' என்று சொன்னான்.
- 'செய்யும்' என்பது பெயரெச்ச வாய்பாடுகளுள் ஒன்று.
- 'இணரெரி தோய்வன்ன இன்னா செய்பவர்'
- கம்பர், 'கம்பராமாயணம்' என்னும் காவியம் படைத்தார்.

இரட்டை மேற்கோள்குறி (" ")

- நேர்கூற்றுத் தொடர்களிலும் மேற்கோள் தொடர்களிலும் இரட்டைமேற்கோள் குறி இடப்படும்.
- (எ–டு)
- இராமன், "நாளை வருகிறேன்" என்றான்.
- "ஒழுக்கமுடைமை குடிமை" என்றார் திருவள்ளுவர்.

## 11ம் வகுப்பு பழைய புத்தகம் பக்க எண் 126

பொருத்தமான நிறுத்தற் குறிகளையிட்டு எழுதுக

1. மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ உன்னையறிந்தோ தமிழை ஓதினேன் என்று சினந்தான் கம்பன்

2. நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா வேற்படையும் வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ் ஆளுமே பெண்மை யரசு

3. புனிதவதியார் தாம் பெற்ற பேய்வடிவத்தால் பேயார் என்றும் இறைவன் அம்மையே என்றழைத்ததால் அம்மையார் என்றும், தாம் பிறந்த காரைக்காலுக்கும் பெருமை சேர்த்ததால் காரைக்காலம்மையார் என்றும் அழைக்கப்படுகின்றார்

விடை

1. மன்னவனும் நீயோ, வளநாடும் உன்னதோ, உன்னையறிந்தோ தமிழை ஓதினேன் என்று சினந்தான் கம்பன்.

2. நாற்குணமும், நாற்படையா, ஐம்புலனும், நல்லமைச்சா, ஆர்க்கும் சிலம்பே, அணிமுரசா, வேற்படையும், வாளுமே, கண்ணா, வதன மதிக்குடைக்கீழ் ஆளுமே, பெண்மை யரசு.

3. புனிதவதியார் தாம் பெற்ற பேய்வடிவத்தால் பேயார் என்றும், இறைவன் அம்மையே என்றழைத்ததால் அம்மையார் என்றும், தாம் பிறந்த காரைக்காலுக்கும் பெருமை சேர்த்ததால் காரைக்காலம்மையார் என்றும் அழைக்கப்படுகின்றார்.

## 12ம் வகுப்பு இயல் 2

### நிறுத்தற் குறிகள்.

1. நிறுத்தற் குறிகள் வாக்கியப் பிரிவுபாட்டிற்கும் பொருள் தெளிவிற்கும் இன்றியமையாதவையாகும். அவற்றுள் சிலவற்றை அறியலாம். அவை ஒற்றைக்குறி, இரட்டைக்குறி என இருவகைப்படும்.

இரட்டைக்குறி நேர்க்கூற்று வாக்கியங்களிலும் மேற்கோள் காட்டும் பொழுதும் வரும்.

(எ–டு) "ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுது", என்று என் தந்தை சொன்னார்.

"ஒழுக்கமுடைமை குடிமை", என்பது திருவள்ளுவர் வகுத்த வரையறையாகும்.

2. ஒற்றைக்குறி நேர்க்கூற்றுக்குள் மேற்கோள் காட்டும்பொழுதும் கட்டுரைப்பெயரும் நூற்பெயரும் குறிப்பிடும் பொழுதும் இன்னும் சில இடங்களிலும் வரும்.

(எ–டு) இயேசு மக்களை நோக்கி, "ஆயக்காரன் கோயிலுக்கு வெளியே நின்று, 'தேவனே, தீயோனாகிய என்பால் இரக்கங்கொள்ளும்,' என வேண்டினான் என்பதை அறிந்துகொள்ளுங்கள்," என்றார்.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் எழுதியுள்ள, 'தமிழியற் கட்டுரைகள்',என்ற நூல் எளிமையும் ஆழமும் கொண்டு விளங்குகிறது.

### நிறுத்தற் குறிகள்:

- கால் புள்ளி (,)
- அரைப்புள்ளி (;)
- முக்கால் புள்ளி (:)
- முற்றுப் புள்ளி (!)
- முப்புள்ளி (...)

- கேள்விக் குறி (?)
- உணர்ச்சிக்குறி (!)
- இரட்டை மேற்கோள் குறி (")
- ஒற்றை மேற்கோள் குறி (")
- தனி மேற்கோள் குறி (')
- மேற்படி குறி (")
- பிறை அடைப்பு ( )
- சதுர அடைப்பு []
- இணைப்புக் கோடு (-)
- சாய்கோடு (/)
- அடிக்கோடு (–)
- உடுக்குறி (*)

## 2. திருக்குறள்

**ஊக்கமுடைமை**

உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று

- ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும்; ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ?

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்

- ஒருவர்க்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும்; மற்றப் பொருளுடைமையானது நிலைபேறு இல்லாமல் நீங்கிவிடுவதாகும்.

ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்

- ஊக்கத்தை உறுதியாகத் தம்கைப் பொருளாக உடையவர், ஆக்கம் (இழந்துவிட்ட காலத்திலும்) இழந்துவிட்டோம் என்று கலங்கமாட்டார்.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை

- சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழி கேட்டுக்கொண்டு போய்ச் சேரும்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு

- நீர்ப்பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவினவாகும்; மக்களின் ஊக்கத்தின் அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து

- எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ணவேண்டும்; அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு

- உடம்பை மறைக்குமளவு அம்புகளால் புண்பட்டும், யானை தன் பெருமையை நிலைநிறுத்தும்; அதுபோல், ஊக்கம் உடையவர் அழிவு வந்தவிடத்திலும் தளரமாட்டார்.

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னுஞ் செருக்கு

- ஊக்கம் இல்லாதவர், இவ்வுலகில் யாம் வண்மை உடையேம் ' என்று தம்மைத் தாம் எண்ணி மகிழும் மகிழ்ச்சியை அடையமாட்டார்.

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்

- யானை பருத்த உடம்பை உடையது; கூர்மையான கொம்புகளை உடையது; ஆயினும் ஊக்கமுள்ளதாகிய புலி தாக்கினால் அதற்கு அஞ்சும்.

உரமொருவற்கு உள்ள வெறுக்கைஅஃ தில்லார்
மரம்மக்க ளாதலே வேறு

- ஒருவனுக்கு வலிமையாவது ஊக்க மிகுதியே. அவ்வூக்கம் இல்லாதவர் மரங்களே: (வடிவால்) மக்களைப் போல் இருத்தலே வேறுபாடு.

**நூல் வெளி**

- திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர். எக்காலத்துக்கும் பொருந்தும் வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கூறியுள்ளார். வான்புகழ் வள்ளுவர், தெய்வப்புலவர், பொய்யில் புலவர் முதலிய பல சிறப்புப் பெயர்கள் இவருக்கு உண்டு
- திருக்குறள் அறத்துப்பால் பொருட்பால். இன்பத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 குறள்பாக்களைக் கொண்டுள்ளது. "திருக்குறளில் இல்லாததும் இல்லை. சொல்லாததும் இல்லை" என்னும் வகையில் சிறந்து விளங்குகிறது.
- திருக்குறளுக்கு உலகப் பொதுமறை, வாயுறை வாழ்த்து முதலிய பல சிறப்புப் பெயர்கள் வழங்குகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நிலையான செல்வம் -----------

அ) தங்கம் ஆ) பணம்
இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

2. ஆராயும் அறிவு உடையவர்கள் ----------- சொற்களைப் பேசமாட்டார்கள்.

அ) உயர்வான ஆ) விலையற்று
இ) பயன்தராத ஈ) பயன்உடைய

இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

*1) ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் ஊக்கம்*
*அசைவுஇலா உடையான் உழை.*

விடை

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா
ஊக்கம் உடையான் உழை.

*2) உள்ளுவது உயர்வுள்ளல் எல்லாம் மற்றது*
*தள்ளாமை தள்ளினும் நீர்த்துட*

விடை

உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

"ஊக்கமது கைவிடேல்" என்பது ஔவையாரின் ஆத்திசூடி. இவ்வரியோடு தொடர்பு டைய திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

1) விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் அன்று.

2) உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

3) சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல்.

விடை

2) உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

tnpscbooks

பின்வரும் கதைக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

வீட்டிற்குள் வந்த வேலனைத் தந்தை அழைத்தார். 'உங்கள் பள்ளியில் பேச்சுப்போட் டி நடப்பதாகக் கூறினாயே, பெயர் கொடுத்து விட்டாயா?" என்று கேட்டார். 'இல்லையப் பா, அமுதன் என்னைவிட நன்றாகப் பேசுவான். அவனுக்குத்தான் பரிசு கிடைக்கும். எனவே நான் பெயர் கொடுக்கவில்லை" என்றான் வேலன்.

"போட்டியில் வெற்றியும் தோல்வியும் இயல்புதான். அதற்காகப் போட்டியிடாமல் இருக் கக் கூடாது. நாம் எந்த அளவு ஊக்கத்துடன் செயல்படுகிறோமோ அந்த அளவிற்கு வெற்றி கிடைக்கும். எனவே நீ போட்டியில் கலந்துகொள்" என்றார் அப்பா. உற்சாகம் அடைந்தான் வேலன். "நாளை பெயர் கொடுத்துவிடுகிறேன் அப்பா" என்றான்.

1. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

2. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

3. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

விடை

2. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

## 4. திரிகடுகம் – நல்லாதனார்

1. தூயவர் செயல்கள்

உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும் – தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில்.

பொருள்

- (நீராடிய பின் உண்ணுதல், பெரும்பயன் கிடைத்தாலும் பொய்ச்சாட்சி சொல்லாமல் இருத்தல், உடல்வாடித் தளர்ந்தபோதும் அறிவு ஒழுக்கங்களில் குன்றாது இருத்தல் ஆகிய இம்மூன்றும் மனம், மொழி, மெய்களால் தூய்மை உடையவரின் செய்கைகளாம்.)

சொற்பொருள்:

- (உண்பொழுது – உண்ணும்பொழுது
- பெறினும் – பெற்றாலும்
- பால்பற்றி – ஒருபக்கச் சார்பு (நடுவுநிலைமையில் இருந்து மாறுதல்)
- தோல்வற்றி – தோல்சுருங்கி
- சாயினும் – அழியினும்
- சான்றாண்மை – அறிவு ஒழுக்கங்களில் நிலைத்து நிற்றல்
- குன்றாமை – குறையாது இருத்தல் தூஉயம் – தூய்மை உடையோர்)

1. அறவுணர்வு உடையாரிடத்து உள்ளவை

இல்லார்க்கொன் றீயும் உடைமையும், இவ்வுலகில்
நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் – எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க் குள.

பொருள் :

- வறியவருக்குப் பொருளை அளித்தல், இவ்வுலகத்துப் பொருள்களின் நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல் எவ்வுயிரையும் துன்புறுத்தாத நிலையில் வாழ்தல் என்னும் இம்மூன்றும் அறவழியில் நடக்கும் மக்களுக்கு என்றும் உண்டு.

பொருள்

- ஈயும் | அளிக்கும்
- நில்லாமை | நிலையாமை
- நெறி | வழி

- தூய்மை | தூய தன்மை
- மாந்தர் | மக்கள்
- நிறை ஒழுக்கம் | மேலான ஒழுக்கம்
- தேற்றாதான் | கடைப்பிடிக்காதவன்
- வனப்பு | அழகு
- தூறு | புதர்
- வித்து – விதை

**புதரில் விதைத்த விதை**

1. முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும் நிறைஒழுக்கம்
தேற்றாதான் பெற்ற வனப்பும் இவைமூன்றும்
தூற்றின்கண் தூவிய வித்து.

**பொருள்:**

- அறம் தவறாது செயல்படும் ஆற்றல் இல்லாதவன் பெற்ற தலைமை, ஒழுக்கம் இல்லாதவன் மேற்கொண்ட தவம், மேலான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவன் பெற்ற அழகு ஆகிய இம்மூன்றும் புதரில் விதைத்த விதைபோன்று பயனற்றவையே.

**சொற்பொருள்:**

- நிறை ஒழுக்கம் – மேலான ஒழுக்கம்;
- தேற்றாதான் – கடைப்பிடிக்காதவன்;
- வனப்பு – அழகு;
- தூறு – புதர்;
- வித்து –விதை.

**ஆசிரியர் குறிப்பு:**

- திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருத்து என்னும் ஊரினர் என்பர். இவரைச், "செருஅடுதோள் நல்லாதன்" எனப் பாயிரம் குறிப்பிடுவதனால், இவர் போர்வீரராய் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

**நூல் குறிப்பு:**

- திரிகடுகம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் நூறு வெண்பாக்களை உடையது. சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம்.
- இம்மருந்தை உண்ட மனிதர்களுக்கு உடல்நோய் நீங்கும். இதனைப்போன்றே ஒவ்வொரு திரிகடுகப் பாடலிலும் இடம்பெற்றுள்ள மூன்று கருத்துகளும் மக்களின் மனமயக்கத்தைப் போக்கித் தெளிவை ஏற்படுத்தும்.

நூல் பயன்:

- திரிகடுகம் பாடல்களிலுள்ள மூன்று அறக்கருத்துகளும் கற்பாரின் மனத்திலுள்ள அறியாமையாகிய நோயைப் போக்கி, அவரைக் குன்றின்மேலிட்ட விளக்காகச் சமுதாயத்தில் விளங்கச் செய்யும்.

உரிய விடையைத் தேர்வு செய்க

அ) பால்பற்றிச் சொல்லா விடுதலும் – இவ்வடியில் பால்பற்றி என்பதன் பொருள்.

1. பகுப்புப்பற்றி 2. இனம்பற்றி 3. ஒருபக்கச் சார்புபற்றி

ஆ) 'நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும்' இவ்வடியில் வழி என்னும் பொருள்தரும் சொல்.

1. நில்லாமை 2. நெறி 3. உள்

இ) வனப்பு என்னும் சொல்லின் பொருள்

1. அழகு 2. அறிவு 3. வளமை

## 3. கடியலூர் உருத்திரங் கண்ணனார்
## கலங்கரை விளக்கம்

- கடலும் கடல்சார்ந்த இடமும் தமிழரின் வாழ்நிலங்களுள் ஒன்று. கடலோடு வாழ்ந்த தமிழர், தம் தொழில்நுட்ப அறிவால் கலம் படைத்து, அதனைக் கொண்டு மீன்பிடித்தும், வணிகம் செய்தும் வாழ்ந்து வந்தனர். கடற்பயணம் சென்று கரை திரும்பத் தமிழர் கண்ட தொழில்நுட்பமே கலங்கரை விளக்கம்.

*வானம் ஊன்றிய மதலை போல*
*ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி*
*விண்பொர நிவந்த வேயா மாடத்து*
*இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி*
*உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்*
*துறை*......

*– கடியலூர் உருத்திரங் கண்ணனார்*

சொல்லும் பொருளும்

- மதலை – தூண்
- ஞெகிழி – தீச்சுடர்
- அழுவம் – கடல்
- வேயா மாடம் – வைக்கோல் போன்றவற்றால் வேயப்படாது, திண்மையாகச் சாந்து பூசப்பட்ட மாடம்
- சென்னி – உச்சி
- உரவுநீர் – பெருநீர்ப் பரப்பு
- கரையும் – அழைக்கும்

பாடலின் பொருள்

- கலங்கரை விளக்கமானது வானம் கீழே விழுந்துவிடாமல் தாங்கிக் கொண்டிருக்கும் தூண் போலத் தோற்றமளிக்கிறது; ஏணி கொண்டு ஏறமுடியாத உயரத்தைக்

கொண்டிருக்கிறது; வேயப்படாமல் சாந்து பூசப்பட்ட விண்ணை முட்டும் மாடத்தை உடையது. அம்மாடத்தில் இரவில் ஏற்றப்பட்ட எரியும் விளக்கு, கடலில் துறைமுகம் அறியாமல் கலங்கும் மரக்கலங்களைத் தன் துறைமுகம் நோக்கி அழைக்கிறது.

நூல் வெளி

- கடியலூர் உருத்திரங்கண்ணனார் சங்ககாலப் புலவர். இவர் கடியலூர் என்ற ஊரில் வாழ்ந்தவர். இவர் பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.
- பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் தொண்டைமான் இளந்திரையன். இந்நூலின் 346 முதல் 351 வரை உள்ள அடிகள் நமக்குப் பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளன.
- வள்ளல் ஒருவரிடம் பரிசு பெற்றுத் திரும்பும் புலவர், பாணர் போன்றோர் அந்த வள்ளலிடம் சென்று பரிசு பெற, பிறருக்கு வழிகாட்டுவதாகப் பாடப்படுவது ஆற்றுப்படை இலக்கியம் ஆகும்.

பத்துப்பாட்டு நூல்கள்

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வேயா மாடம் எனப்படுவது ________

அ) வைக்கோலால் வேயப்படுவது

ஆ) சாந்தினால் பூசப்படுவது

இ) ஓலையால் வேயப்படுவது

ஈ) துணியால் மூடப்படுவது

2. உரவுநீர் அழுவம் – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

அ) காற்று ஆ) வானம்

இ) கடல் ஈ) மலை

3. கடலில் துறை அறியாமல் கலங்குவன ----------------

அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள்

இ) தூண்கள் ஈ) மாடங்கள்

4. தூண் என்னும் பொருள் தரும் சொல்

அ) ஞெகிழி ஆ) சென்னி

இ) ஏணி ஈ) மதலை